பக்கங்கள் - 20
விலை - ரூபா 60

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 214

ஞாயிற்றுக்கிழமை
29 ஜூன் 2025

ஆனி 15 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

## ஆரவாரமின்றி பதவியேற்றார் மாரப்பன

விரிவு பக்:- 03

# செம்மணியில் மண்பரிசோதனை; கொழும்பிலிருந்து விசேட குழு!

### ட்ரோன் ஆராய்ந்த இடத்தில் துப்புரவு

யாழ்ப்பாணம், ஜூன் 29

யாழ்ப்பாணம் செம்மணி சித்துப்பாத்தி இந்து மயானத்தில் மண்மாதிரிப் பரிசோதனைகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதற்காக பிரத்தியேக குழுவொன்று இன்று யாழ்ப்பாணம் வரவுள்ளது. 19



## செம்மணிப் புதைகுழியில் நேற்று மூன்று சிதிலங்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 29

யாழ்ப்பாணம் செம்மணி மனிதப் புதைகுழியில் நேற்றையதினம் மேலும் மூன்று மனிதச் சிதிலங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் - செம்மணி சித்துப்பாத்தி இந்து மயானத்தில் மனிதச் சிதிலங்கள் 19

### வடமராட்சி மணற்காட்டில்

## காணாமற்போன மீனவர் சடலமாக நேற்று மீட்பு



யாழ்ப்பாணம், ஜூன் 29

யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு மணற்காடு கடற்பகுதியில் காணாமற்போன மீனவர் நேற்றுச் சடலமாக மீட்கப்பட்டுள் 19

## உலக வங்கியின் அதிகாரிகள் இன்று யாழ்ப்பாணம் வருகை

### ஆளுநர் அலுவலகத்தில் சந்திப்பு

விரிவு பக்கம்:- 19



## பற்றியெரிகிறது கல்லுண்டாய் இரவிரவாகப் பெரும் பதற்றம்!

### சுவாசிக்க முடியாமல் மக்கள் அவதி

யாழ்ப்பாணம், ஜூன் 29

வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபையின் ஆளுகைக்கு உட்பட்ட, யாழ்ப்பாணம் மாநகர சபையின் திண்மக்கழிவகற்றல் நிலைய 19

## மீனவர் கொலையுண்டாரா? பொலிஸாரிடம் முறைப்பாடு

யாழ்ப்பாணம், ஜூன் 29

வடமராட்சி கிழக்கு மணற்காடுப் பகுதியிலிருந்து கடற்றொழிலுக்கு சென்ற நிலையில் காணாமற்போன மீனவரின் சடலம் நேற்று மீட்கப்பட்டுள்ள நிலையில் அவர் கொலை செய்யப்பட்டிருக்கலாம் 19

### சட்டவிரோத ஊடுருவல்

## முல்லைத்தீவு இளைஞர்கள் தமிழகத்தில் வைத்துக் கைது

சென்னை, ஜூன் 29

முல்லைத்தீவில் இருந்து தமிழகத்துக்கு சட்டவிரோதமான முறையில் ஊடுருவிய மூன்று இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். தனுஷ்கோடிக்கு அருகிலுள்ள நான்காவது மணல் திட்டில் வைத்து 19

## காதலிப்பதாக ஏமாற்றி யுவதி துஷ்பிரயோகம்!

### இருவர் கைது: ஒருவர் தலைமறைவு



யாழ்ப்பாணம், ஜூன் 29

யுவதியொருவர் கூட்டுப்பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

இளைஞர் ஒருவர் அந்த யுவதியைக் காதலிப்பதாகக் கூறி, அவரை 19

## காரைநகர் கடற்பகுதியில் 209 கிலோ கஞ்சா மீட்பு!

யாழ்ப்பாணம், ஜூன் 29

இந்தியாவில் இருந்து கடத்திவரப்பட்ட 209 கிலோ கஞ்சா காரைநகர் கடற்பகுதியில் வைத்து மீட்கப்பட்டுள்ளது.

கடற்படையினர் மேற் 19

### வலி.வடக்கு

## இராஜேஸ்வரி ஆலயம் செல்ல மீண்டும் இராணுவத்தினர் தடை!

யாழ்ப்பாணம், ஜூன் 29

பலாலி இராஜேஸ்வரி அம்மன் ஆலயம் 35 வருடங்களுக்குப் பின்னர் விடுவிக்கப்பட்ட நிலையில், அந்த ஆலயத்துக்குச் செல்வதற்கு இராணுவத்தினர் நேற்று மீண்டும் அனுமதி 19

## இராஜேஸ்வரி அம்மன் ஆலயம் இம்மாத இறுதிக்குள் விடுவிப்பு!

யாழ்ப்பாணம், ஜூன் 29

வலி.வடக்கு பலாலி இராஜேஸ்வரி அம்மன் ஆலயம் எதிர்வரும் செவ்வாய்க்கிழமைக்குள் மக்களின் பாவனைக்காக முழுமையாக விடுவிக்கப்படும் என தேசிய மக்கள் சக்தியின் யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இளங்குமரன் 19

### முச்சந்தி முராரி

'தர்மத்தின் வாழ்வுதனைச் சூது கவ்வும் மீண்டும் தர்மமே வெல்லும் எண்டது உண்மைதான் பாருங்கோ'

## சி.ஐ.டி. பணிப்பாளராக மீண்டும் ஷானி அபேசேகர



கொழும்பு, ஜூன் 29

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் புதிய பணிப்பாளராக சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஷானி அபேசேகர நியமிக்கப்பட்டுள்ளார்.


தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் ஒப்புதலுக்கமையவே அவருக்கு இந்தப் பதவி வழங்கப்பட்டுள் 19

சஞ்சீவி

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

29.06.2025 ஞாயிற்றுக்கிழமை



| கொவிசெத | ஹந்தஹன ராசி சுப பலன் | NLB ஜய | மெகா பவர் | மஹஜன சம்பத | தன நிதானய | அத சம்பத |
|---|---|---|---|---|---|---|
| திகதி 28.06.2025 | திகதி 28.06.2025 | திகதி 28.06.2025 | திகதி 28.06.2025 | திகதி 28.06.2025 | திகதி 28.06.2025 | திகதி 28.06.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் 4116 | சீட்டிழுப்பு இலக்கம் 1183 | சீட்டிழுப்பு இலக்கம் 0142 | சீட்டிழுப்பு இலக்கம் 2222 | சீட்டிழுப்பு இலக்கம் 5874 | சீட்டிழுப்பு இலக்கம் 1904 | சீட்டிழுப்பு இலக்கம் 0449 |
| ஆங்கில எழுத்து O | வெற்றி இலக்கினம் தும்பம் | ஆங்கில எழுத்து H | ஆங்கில எழுத்து S | ஆங்கில எழுத்து Y | ஆங்கில எழுத்து F | ஆங்கில எழுத்து Y |
| | | | சுப்பர் இலக்கம் 26 | | | |
| வெற்றி இலக்கங்கள் 16 17 70 80 | வெற்றி இலக்கங்கள் 16 27 49 60 | வெற்றி இலக்கங்கள் 5 5 3 6 | வெற்றி இலக்கங்கள் 01 47 62 75 | வெற்றி இலக்கங்கள் 0 7 0 6 0 6 | வெற்றி இலக்கங்கள் 16 36 49 77 | வெற்றி இலக்கங்கள் 0 6 0 6 |
| விசேட எழுத்து O | | | | | விசேட எழுத்து F | |

# உள்ளூராட்சிசபைகளில் ஊழல் இடம்பெற்றால் சட்டம் பாயும்

## கண்டறிய ஜனாதிபதி ஆணைக்குழு அரசாங்கம் திட்டம்

கொழும்பு, ஜூன் 29

**கடந்த கால மற்றும் புதிதாக உருவாக்கப்பட்டுள்ள உள்ளூராட்சி சபைகள் அனைத்திலும் இடம்பெற்ற- இடம்பெறும் ஊழல், மோசடிகளைக் கண்டறிவதற்காக ஜனாதிபதி ஆணைக்குழுவொன்றை அமைப்பதற்கு அரசு திட்டமிட்டுள்ளதாக அரச வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.**

அதன்படி, கேள்விமனுகோரல், வாகனப் பாவனை, ஊழியர்கள் இணைப்பு மற்றும் முன்னாள் உறுப்பினர்கள் சிறப்புரிமை பாவனை உள்ளிட்ட விடயங்களில் இடம்பெற்ற மோசடிகள் தொடர்பில் இந்த ஆணைக்குழு விசாரணை நடத்தும்.

முக்கியமாக முன்னாள் தவிசாளர்கள் உறுப்பினர்கள் முறையற்ற விதத்தில் ஈட்டிய சொத்துகள் தொடர்பில் இந்த ஆணைக்குழு விசேட கவனம் செலுத்தும் என்று அறிய முடிகிறது.

மேற்படி சபைகளில் கடந்த காலங்களில் மோசடிகள் இடம்பெற்றதாக மக்களிடம் இருந்து அரசுக்கும் இலஞ்ச,ஊழல் விசாரணை ஆணைக்குழுவுக்கும் அதிகமான முறைப்பாடுகள் அனுப்பப்பட்டுவருகின்றன என்றும் கூறப்படுகின்றது. அதேபோல், புதிதாக உருவாக்கப்பட்டுள்ள சபைகளிலும் ஊழல் மோசடிகள் இடம்பெறாதவாறு நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-75)



## ராஜிதவுக்கு பிடியாணை

கொழும்பு, ஜூன் 29

முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்னவை சந்தேகநபராகப் பெயரிட்டுக் கைதுசெய்ய இலஞ்ச ஊழல் ஆணைக்குழு நடவடிக்கை எடுத்துள்ளது.

கீரிந்த துறைமுகத்தில் முறையான சட்ட நடைமுறைகளைப் பின்பற்றாமல் மணல் அகழ்வுப் பணிகளை மேற்கொள்வதற்காக ஒரு கொரிய நிறுவனத்துக்குக் குத்தகைக்கு வழங்கியதன் மூலம் அரசாங்கத்துக்கு 26,230,496 ரூபா இழப்பை ஏற்படுத்திய குற்றச்சாட்டில் அவர் கைதுசெய்யப்படவுள்ளார்.

இந்த விடயத்தை இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் உதவிப் பணிப்பாளர் நேற்றுமுன்தினம் கொழும்பு பிரதான நீதிவான் தனுஜா லக்மாலி ஜெயதுங்கவிடம் அறிவித்தார்.

இச்சம்பவம் தொடர்பாக அப்போதைய கடற்றொழில் கூட்டுத்தாபனத்தின் தலைவர் உபாலி லியனகே கைதுசெய்யப்பட்டு நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டபோது, இது தொடர்பில் மேலும் சந்தேகநபர்கள் உள்ளனரா என நீதிவான் வினவியபோதே உதவிப் பணிப்பாளர் மேற்கண்ட தகவலைத் தெரிவித்தார். (ச-இ)

## 2026 ஆரம்பத்திலிருந்து 'லஞ்ச் சீற்' பாவனை தடை!

### நல்லூர்ப் பிரதேசசபையில் தீர்மானம்

யாழ்ப்பாணம், ஜூன் 29

எதிர்வரும் 2026 ஆம் ஆண்டு தொடக்கத்திலிருந்து யாழ்ப்பாணம் நல்லூர்ப் பகுதியில் உணவுப்பொதி செய்யப் பயன்படுத்தப்படும் பொலித்தீன் தாள்கள் பாவனைக்குத் தடை விதிக்கப்படவுள்ளது.

இந்தப் பிரேரணை நேற்றுமுன்தினம் நடைபெற்ற நல்லூர்ப் பிரதேசசபை அமர்வில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

அதன்படி நல்லூர்ப் பிரதேசசபை எல்லைக்குட்பட்ட உணவகங்கள் மற்றும் திருமண மண்டபங்களில் 'லஞ்ச் சீற்' முற்றாகத் தடைசெய்யப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

சுற்றுச்சூழல் மாசுபாட்டைக் குறைக்கும்நோக்கில், பிளாஸ்ரிக் பொருள்கள் பயன்பாட்டைக் கட்டுப்படுத்தும் முயற்சியின் ஒரு பகுதியாக உப தவிசாளர் இ. ஜெயகரன் முன்வைத்த பிரேரணைக்கு உறுப்பினர்கள் ஒப்புதல் அளித்த நிலையில் தீர்மானமாக நிறைவேற்றப்பட்டது. (ச-26)

### சிறுமி துஷ்பிரயோகம்

## 68 வயது நபருக்கு 60 ஆண்டுகள் சிறை

கொழும்பு, ஜூன் 29

மழலையர் பள்ளிச் சிறுமியை அவரது பெற்றோர் இல்லாத நேரத்தில் தனது வீட்டுக்கு அழைத்து வந்து துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட 68 வயதுடையவருக்கு 60 ஆண்டுகள் கடூழியச் சிறைத்தண்டனை விதித்து கொழும்பு மேல் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

மேலும் பிரதிவாதிக்கு 30 ஆயிரம் ரூபா அபராதமும், பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு 10 இலட்சம் ரூபா இழப்பீடும் வழங்கப்பட வேண்டும் என்றும் நீதிபதி உத்தரவிட்டார். இந்த அபராதத்தையும் இழப்பீட்டையும் செலுத்தத் தவறினால், மேலதிகமாக இரண்டு ஆண்டுகள் [illegible] என்றும் அவர் தீர்ப்[illegible] (ச-இ)

| சுபிரி தன சம்பத | | |
|---|---|---|
| திகதி 28.06.2025 | தினம் சனிக்கிழமை | வெற்றி வாரம் 0582 |
| ஆங்கில எழுத்து O | வெற்றி இலக்கம் 1 0 3 5 6 9 | |

| Super Ball DLB | | |
|---|---|---|
| திகதி 28.06.2025 | தினம் சனிக்கிழமை | |
| சீட்டிழுப்பு வாரம் 2848 | ஆங்கில எழுத்து C | வெற்றி இலக்கம் 27 40 58 78 |

| சனிதா DLB | | |
|---|---|---|
| திகதி 28.06.2025 | தினம் சனிக்கிழமை | |
| ஆங்கில எழுத்து X | வெற்றி இலக்கம் 15 48 62 64 | வெற்றி வாரம் 5009 |

| SASIRI DLB | | |
|---|---|---|
| திகதி 28.06.2025 | தினம் சனிக்கிழமை | |
| வெற்றி வாரம் 0714 | வெற்றி இலக்கம் 12 20 37 | |

| லக்ன ராசி DLB | | |
|---|---|---|
| திகதி 28.06.2025 | தினம் சனிக்கிழமை | |
| மேஷம் ♈ | வெற்றி இலக்கம் 13 19 35 38 | சீட்டிழுப்பு வாரம் 4560 |

| KAPRUKA DLB | | | |
|---|---|---|---|
| திகதி 28.06.2025 | தினம் சனிக்கிழமை | | |
| ஆங்கில எழுத்து Q | சுப்பர் இலக்கம் 24 | வெற்றி இலக்கம் 15 32 50 52 | வெற்றி வாரம் 2024 |

| அத கோடிபதி DLB | | |
|---|---|---|
| திகதி 28.06.2025 | தினம் சனிக்கிழமை | |
| ஆங்கில எழுத்து S | வெற்றி இலக்கம் 14 29 42 76 | வெற்றி வாரம் 2674 |

## படையினரை சிக்கவைக்கவே முழுவீச்சில் முயற்சிகள்!

### கொதிக்கிறார் விமல்

கொழும்பு, ஜூன் 29

போரின்போது கட்டளையிட்ட அதிகாரிகளைச் சிக்க வைக்கும் நோக்கிலேயே உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவை அமைப்பதற்குரிய முயற்சி இடம்பெறுகிறது என்று முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ஸ குற்றஞ்சாட்டியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவை அமைக்குமாறு அடுத்து கோரிக்கை விடுக்கப்படலாம். தென்னாபிரிக்காவைப் போன்று கவலைகளைக் கேட்டறிந்து, அவற்றுக்குத் தீர்வு வழங்கியதுபோன்ற ஆணைக்குழுவாக இது இருக்காது. மாறாக இதுவரை கண்டறியப்பட்ட உண்மைகளை வழக்குத் தொடுக்கும் விதத்தில் சாட்சியங்கள் திரட்டும் ஆணைக்குழுவாகவே அது அமையப்போகிறது. தண்டனை வழங்குவதற்குரிய பரிந்துரைகூட முன்வைக்கப்படலாம்.

ஏனெனில் போரின் முக்கியமான காலகட்டத்தில் போரை முடிப்பதற்குத் தலைமை வழங்கிய, கட்டளையிட்ட அதிகாரிகளைச் சிக்க வைப்பதற்குரிய தகவல்களைத் திரட்டுவதே இதன்நோக்கம்- என்றார். (ச-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ராஜ் ஜுவல்லர்ஸ்
தங்க நகை அடகு சேவை
வட்டி வீதம் குறைக்கப்பட்டுள்ளது
1 பவுண் 22 கரட்டிற்கு
220000/-
அடகுக்காலம் ஒரு வருடம்
இல. 59 ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி சந்தைக்கு அருகில்
021 221 7287, 076 636 1238

# சாவகச்சேரிப் பொலிஸாரால் மணல் மாபியாக்கள் வேட்டை


### *டிப்பர்களால் நிறையும் பொலிஸ் நிலையம்*

யாழ்ப்பாணம், ஜூன் 29

சட்டவிரோத செயற்பாடுகளை முழுமையாகக் கட்டுப்படுத்தும் முகமாக சாவகச்சேரிப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பாலிதசெனவிரத்னவின் வழிகாட்டலின்கீழ் முன்னெடுக்கப்படும் விசேட நடவடிக்கையில் அதிகளவான டிப்பர்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

அவை சாவகச்சேரிப் பொலிஸ் நிலையத்தில் சட்டநடவடிக்கைகளுக்காகத் தரித்து விடப்பட்டுள்ளன.

சட்டவிரோதமாக மணல் கடத்தலில் ஈடுபடும் டிப்பர்கள் பொலிஸாரின் தொடர் வேட்டையில் நாளுக்கு நாள் சிக்கி வருகின்றன என்றும் நேற்றுமுன்தினம் கிளிநொச்சிப் பிரதேசத்தில் இருந்து சட்டவிரோதமாக ஆற்று மணல் ஏற்றி வந்த 2 டிப்பர்கள் தப்பியோடியநிலையில் அதனைத் துரத்திச் சென்று டிப்பர்களைக் கைப்பற்றி சாரதிகளுக்கு எதிராக வழக்குகள் பதிவு செய்யப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (ச-22,28,20)



# இலங்கையில் இனப்படுகொலை விசாரணையைத் துரிதப்படுத்துக!

### *கனடா அரசிடம் சுகாஷ் கோரிக்கை*

பிரம்டன், ஜூன் 29

இலங்கையில் நடந்த இனப்படுகொலை தொடர்பில் சர்வதேச விசாரணையை ஆரம்பிக்க காலதாமதமின்றிக் கனடா அரசு கைகொடுக்க வேண்டுமெனத் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளர் க.சுகாஷ் வலியுறுத்தியுள்ளார்.


கனடாவில் பிரம்டன் மாநகரில் அமைக்கப்பட்டுள்ள முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபியை நேற்றுப் பார்வையிட்ட பின்னர் கருத்து வெளியிட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஈழத்தில் தமிழினத்துக்கு எதிராக சிங்கள பௌத்த அரசால் திட்டமிட்டு அரங்கேற்றப்பட்ட இனப்படுகொலையை நினைவுகூர்ந்து கனடாவின் பிரம்டன் நகரில் நினைவுச்சின்னம் அமைக்கப்பட்டிருக்கின்றமையை நாங்கள் வரவேற்கின்றோம்.

இதற்கு ஒத்துழைத்த கனடா அரசுக்கும், பிரம்டன் நகராட்சிக்கும், பிரம்டன் நகர மேயருக்கும் எங்கள் மனமார்ந்த நன்றிகள்.

இந்த நினைவுச் சின்னத்தை உத்வேகமாகக் கொண்டு ஈழத்தில் அரங்கேற்றப்பட்டது இனப்படுகொலை, படுகொலை செய்யப்பட்ட ஒரு இலட்சத்து 46 ஆயிரத்து 746 க்கும் அதிகமான எங்கள் உறவுகளுக்கு நீதிகோரியும், அழிக்கப்பட்டுக்கொண்டிருக்கின்ற தமிழ்த்தேசத்தைக் காப்பாற்றவும் அனைவரும் முழுமூச்சாகச் செயற்படவேண்டும்- என்றார். (ச-66)



# பதவியேற்றார் மாரப்பன

யாழ்ப்பாணம், ஜூன் 29

யாழ்ப்பாணம் பிரதிப் பொலிஸ்மா அதிபராக மாரப்பன நேற்று தனது கடமைகளை சம்பிரதாயபூர்வமாகப் பொறுப்பேற்றார்.

இதுவரையில் யாழ்ப்பாணம் பிரதிப் பொலிஸ்மா அதிபராகப் பணியாற்றிய காளிங்க ஜெயசிங்க கொழும்புக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ள நிலையில் அவருடைய இடத்துக்குக் கொழும்பில் பணியாற்றிவந்த மாரப்பன நியமிக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-26,20)

# பாதயாத்திரையின்போது குடும்பஸ்தர் திடீர்ச்சாவு!

யாழ்ப்பாணம், ஜூன் 29

இலங்கையின் நீண்டதூரப் பாதயாத்திரையாகக் கருதப்படும் தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்திலிருந்து கதிர்காமக் கந்தன் ஆலயம் நோக்கிய பாதயாத்திரைக் குழுவில் பங்கேற்ற குடும்பஸ்தரொருவர் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை கதிர்காமத்தில் திடீரென உயிரிழந்துள்ளார்.

புத்தளம் உடப்புக் கிராமத்தைச் சேர்ந்த எஸ்.பொன்னம்பலம் (வயது - 52) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

கதிர்காமக் கந்தன் ஆலயத்துக்குள் பிரவேசித்த போது திடீரெனச் சரிந்து விழுந்த நிலையில் அவர் உடனடியாக அவர் கதிர்காமம் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டபோது அங்கு சிகிச்சையின் போது உயிரிழந்தார்.

மாரடைப்பே அவரது உயிரிழப்புக்குக் காரணமென மருத்துவ அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது. (ச- 66)

# வெள்ளோட்டம்

கோண்டாவில் கிழக்கு ஆசிமட அரசடி விநாயகர் ஆலயத்தின் புதிய சப்பர வெள்ளோட்ட விழா இன்று ஞாயிற்றுக்கிழமை மதியம்12.05 மணியளவில்நடைபெறவுள்ளது. (ச-66)

பருத்தித்துறை கோட்டுவாசல் அம்மன் ஆலயத் தெப்பத்திருவிழாவை முன்னிட்டு சண்டிகாபரமேஸ்வரி தாயார் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை மாலை ஆலயத்தில் இருந்து எழுந்தருளி பருத்தித்துறைநகர் ஊடாக தும்பளை வீதி வழியே கொட்டிக் கடற்கரைக்கு வீதியுலா சென்றார். இதன்போது பொம்மலாட்டம், பொய்க்கால் குதிரை ஆட்டம், வானவேடிக்கைகளுடன் அம்பாள் வீதி உலா இடம்பெற்றிருந்தது. (ச-100)



### சங்கானைப் பிரதேச செயலகத்தில்

# 9 உத்தியோகத்தர்கள் 7 வருடங்களாகப் பணி

யாழ்ப்பாணம், ஜூன் 29

சங்கானைப் பிரதேச செயலகத்தில் 7 வருடங்களுக்கு மேலாக 9 உத்தியோகத்தர்கள் எந்தவித இடமாற்றமும் இன்றிப் பணிபுரிந்து வருகின்றனர் எனச் சங்கானைப் பிரதேச செயலகம் தெரிவித்துள்ளது.

தகவல் அறியும் உரிமைச்சட்டத்தின்மூலம் கோரப்பட்ட தகவலுக்கமைவாக குறித்த தகவல் வழங்கப்பட்டது.

இதன்படி குடிசை வீட்டு வசதிகள் தொகைமதிப்பு 2024 இற்கான வேலைகள் மற்றும் தேர்தல் பணிகள் போன்ற காரணங்களாலும் இவ்வருடம் செப்ரெம்பர் மாதம் ஒருவர் ஓய்வூதியம் பெற்றுச் சென்றுள்ளதாலும் இடமாற்றம் செய்யப்படவில்லை. மேலும் வேறு அமைச்சின் கீழ் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள் என்பதனால் அவர்களின் இடமாற்றம் அமைச்சினாலே வரவேண்டும் என்றும் சங்கானைப் பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலர் திருமதி எஸ்.பிரணவசொரூபி தெரிவித்தார். (ச-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

மலர்வு
01
.
12
.
1947



உதிர்வு
26
.
06
.
2025

## கிருஷ்ணசாமி இராஜகுமாரி

தண்ணீரூற்று மேற்கு முள்ளியவளையைப் பிறப்பிடமாகவும் பொற் தொழிலாளர் வீதி சங்கத்தானை சாவகச்சேரியை நிரந்தர வதிவிடமாகவும் கொண்ட கிருஷ்ணசாமி இராஜகுமாரி அவர்கள் கடந்த (26.06.2025) வியாழக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசரத்தினம் நல்லம்மா தம்பதிகளின் அன்புப் புதல்வியும் காலஞ்சென்றவர்களான குமாரசாமி இராசமணி தம்பதிகளின் அன்பு மருமகளும் அமரர் கிருஷ்ணசாமியின் பாசமிகு துணைவியாரும், வசந்தகுமாரி, பாலகிருஷ்ணன், சாந்தாதேவி (சாந்தி), வத்சலகுமாரி ஆகியோரின் அன்புச் சகோதரியும் சோபனா, ஜீவனா, சதீபன், கிருஷ்ணகுமார், கல்பனா, தீபா ஆகியோரின் பாசமிகு தாயாரும் அருள்மாதவன், நேசராசா, சுதாகரன், கரிகரன், தர்சினி, பானுஜா, ஆகியோரின் பாசமிகு மாமியாரும் லதன், மதுஷா, குலவர்மன், கஜலக்சன், தருக்ஷிகா, டக்ஷிதா, கிந்துஜன், கிருத்திகா, அத்விகா, ஆர்த்திகா, பினுஷா, ஆத்விகா ஆதீஸ ஆகியோரின் அன்பு பேத்தியும் ஆதிரனின் அவரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 30.06.2025 திங்கட்கிழமை சங்கத்தானையில் அமைந்துள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 4:00 மணியளவில் பூதவுடல் தகனக் கிரியைக்காக சாவகச்சேரியில் அமைந்துள்ள கண்ணாடிப்பிட்டி இந்து மயாணத்தில் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல் :
குடும்பத்தினர்

## வாடகைக்கு

மருத்துவ மாணவர்கள் மற்றும் தாதிய உத்தியோகத்தர்களுக்கான அறைகளுடன் கூடிய வீடு யாழ். நகரத்தில் வாடகைக்கு உண்டு.

குறிப்பு : பெண்கள் மட்டும்

தொடர்பு:- 077 711 0015

## வேலையாட்கள் தேவை

பருத்தித்துறை, கல்வியங்காடு
கல்வியங்காடு உணவகத்திற்கு சைவ, அசைவ உணவகத்திற்கு சமையல், ரொட்டி போடுபவர்கள் உடனடியாக தேவை.

தொடர்பு:- 077 929 2093

## வேலை ஆட்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள நட்சத்திர ஹோட்டல் ஒன்றிற்கு வேலை ஆட்கள் தேவை

- Waiter
- Bar Man
- Kitcen Helper
- Cook
- Commis

**அனுபவத்துக்கு ஏற்ப சம்பளம் வழங்கப்படும் தங்குமிடவசதி, உணவு இலவசம்.**
**உங்கள் சுயவிபரக் கோவையை 070 789 6621 இலக்கத்திற்கு அனுப்பலாம்.**

தொடர்புகளுக்கு -
070 789 6621, 077 173 9405

# கிணற்றில் தவறிவீழ்ந்து குழந்தை பரிதாபச் சாவு

பருத்தித்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புலோலி பகுதியில் உள்ள வீடொன்றின் கிணற்றுக்குள் தவறி வீழ்ந்த இரண்டு வயது ஆண்குழந்தை பரிதாபமாக உயிரிழந்துள்ளது.

வைரவர் கோவிலடி, கும்பைகட்டி, புலோலியைச் சேர்ந்த அனுசயன் என்ற குழந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளது. அந்தக் குழந்தை இரு தினங்களுக்கு முன்னர் தனது இரண்டாவது பிறந்த நாளை கொண்டாடிய நிலையில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. (ம-100)

## முதியோர்/ நோயாளர்/ பராமரிப்பு சேவை

யாழ் அரியாலை கண்டி வீதியில் இயங்கும் பராமரிப்பு நிலையத்தில் படுக்கை நோயாளிகள்/ டிமென்ஸியா/ படுக்கைப்புண்/ சகல வகையான நோயாளிகளும். விசேட வைத்தியர்களின் கண்காணிப்பில் சேவை வழங்குகிறோம்.

தொடர்புகளுக்கு: 077 712 6860/ 59
076 252 5725

## தேவை

நிகழ்வுகளின் போது புகைப்படம் எடுப்பதற்கு ஒருவர் தேவை (Personal Photographer) போக்குவரத்து செலவு, கவர்ச்சரமான சம்பளம் என்பன வழங்கப்படும்.

077 774 3185

## பணிப்பெண் தேவை

யாழ்ப்பாணத்தில் சிறிய குடும்பத்திற்கு தங்கி இருந்து வீட்டு வேலை மற்றும் சமையல் செய்யக்கூடிய இளம் பணிப்பெண் தேவை.

தொடர்புகளுக்கு :
077 165 8524

# மரண அறிவித்தல்

தோற்றம்
08
.
06
.
1970



மறைவு
28
.
06
.
2025

## திருமதி கனகாம்பிகை கருணாகரன்

காரைநகர் புதுறோட்டைப் பிறப்பிடமாகவும், கொழும்பு தெஹிவளை களுபோவிலயை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கனகாம்பிகை கருணாகரன் அவர்கள் நேற்று (28.06.2025) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையாபிள்ளை விஸ்வலிங்கம்- செல்வராணி தம்பதியின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சிவப்பிரகாசம்-செல்வராணி தம்பதியின் பாசமிகு மருமகளும், கருணாகரனின் (சுவிஸ் லிங்க் Communication உரிமையாளர்) அன்பு மனைவியும் ஞானகௌரி, சிவானந்தராசா, சாந்தி ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற சந்திரகுமார் மற்றும் மனோகரன், யோகேஸ்வரன், பாஸ்கரன், காலஞ்சென்றவர்களான வரேந்திரன், சபாநடேசன் மற்றும் ஸ்ரீலதா, கஜேந்திரன் ஆகியோரின் அன்பு மைத்துனியும் அருட்செல்வி (ஆசிரியை-கோண்டாவில்), காலஞ்சென்ற விஜயா (ஆசிரியை-பம்பலப்பிட்டி) ஆகியோரின் சகலியும், சயந்தன், சகானா ஆகியோரின் பாசமிகு சித்தியும், நரேஷ், டர்னிசன், கிஷாலவன், தேசிகன், சஜீவன் ஆகியோரின் பாசமிகு பெரியம்மாவும், நிவேதியா, ரசிகா, கீர்த்தி ஆகியோரின் அன்பு மாமியும்ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (29.06.2025) ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் மாலை 5.00 மணி வரை அஞ்சலிக்காக பொரளை ஜெயரட்ண மலர்ச்சாலையில் வைக்கப்பட்டு (30.06.2025) காலை 07.00 மணிக்கு கிரியைகள் ஆரம்பமாகி தகனக்கிரியைகளுக்காக காலை 10.00 மணிக்கு பொரளை பொது மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

இல 10/5,
பாத்தியா மாவத்தை,
களுபோவில,
தெஹிவளை,

தகவல்:
குடும்பத்தினர்.
சி.கருணாகரன் (கணவர்) 071 704 2000
வி.சிவானந்தராஜா (தம்பி) 077 969 2375


## நாகபூஷணி திருமண சேவை

**உள்நாட்டு, வெளிநாட்டு மணமக்கள் ஜாதகங்கள் மிகப் பொருத்தமாக உடன் எம்மால் தெரிவு செய்து தரப்படும்.**

359/6, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
(துர்க்கா மணி மண்டபத்திற்கு அருகாமையில்)
077 138 7596, 071 999 9306

# கண்ணீர் அஞ்சலி

தோற்றம்
26
.
02
.
1950



மறைவு
27
.
06
.
2025

எமது துறையின் முகாமைத்துவ உதவியாளர்
திருமதி ஆ. வாஹினி அவர்களின் பாசமிகு தந்தையார்

## திரு. சுப்பிரமணியம் செல்வராசா

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கணினி விஞ்ஞானத்துறைச் சமூகம்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை



நாளொரு நல்வார்த்தை

வெற்றியானது ஆர்வம், மனதை ஒருமுகப்படுத்தல், விடாமுயற்சி மற்றும் சுயமதிப்பீடு ஆகியவற்றிலிருந்து வருகிறது.


–அல்பேர்ட் ஐன்ஸ்டீன் –

# செம்மணியிலும் விஷம் கக்கும் இனவாதிகள்!

'யாழ்ப்பாணம் - செம்மணிப் புதைகுழிக்குள் ஸ்ரீலங்காப் படையினரின் சடலங்களே உள்ளன. பூநகரி மற்றும் ஆனையிறவு மோதல்களின்போது இராணுவத்தினர் பலர் புலிகளால் கொல்லப்பட்டனர். சிலரின் உடல்களே கிடைக்கப்பெற்றன. எனவே, ஏனையவர்களுடைய உடல்கள் அங்கு புதைக்கப்பட்டிருக்கலாம்' என்றவாறாகத் தெரிவித்திருக்கின்றார் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் அக்மீமன தயாரத்ன தேரர். செம்மணியில் உள்ள புதைகுழிகளின் வரலாற்றை முழு உலகமும் அறியும். அங்கு இராணுவத்தினரால் மிலேச்சத்தனமாகக் கொல்லப்பட்டவர்களின் சடலங்களே புதைக்கப்பட்டுள்ளன என்பது, இராணுவச் சிப்பாய்களின் நீதிமன்றச் சாட்சியங்கள் மூலமும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன. இவ்வாறான நிலையில்தான், 'செம்மணிப் புதைகுழிக்குள் மீட்கப்படுவதும் அவதானிக்கப்படுவதும் இராணுவத்தின் மனிதச் சிதிலங்களே' என மனிதத் தன்மைக்கு முற்றிலும் புறம்பான ஒவ்வாத கருத்தை அக்மீமன தயாரத்ன தேரர் முன்வைத்துள்ளார்.

செம்மணியில் இதுவரை (நேற்றுமுன்தினம் மாலைவரை) மீட்கப்பட்ட மனிதச் சிதிலங்களில் நான்கு சிதிலங்கள் சிறுவர்களுடையவை என்று உறுதிப்படுத்தப்பட்டிருக்கின்றது. அவற்றில் ஒன்று கைக்குழந்தையுடையதாக இருக்கலாம் என்றும் துறைசார் அதிகாரிகள் கருதுகின்றனர். இது எவ்வகையில் இராணுவத்துடன் தொடர்புடைய மனிதப் புதைகுழியாக அமையும்? அக்மீமன தயாரத்ன தேரர் மட்டுமல்ல, முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ஸவும் இதே கருத்தை முன்வைத்துள்ளார். இனிவரும் நாள்களில் இந்த அபத்தமான கருத்துகளைப் பிரதியெடுப்பதற்கென கூட்டமொன்று நிச்சயம் காத்திருக்கும். அவர்களை நம்புவதற்கும் சிலர் இருக்கவே செய்கின்றனர். உலகில் வேறு எந்த நாடுகளிலும் இதுபோன்ற கூற்றுகளைக் கேட்டதுண்டா? இவ்வாறான ஆபத்தான படிநிலைகளைத் தாண்டித்தான் ஈழத் தமிழர்கள் நீதியைக் கண்டடைய வேண்டியிருக்கின்றது.

ஜூன் மாதம் 23ஆம் திகதியன்று இலங்கைக்கு வந்திருந்த ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் வோல்கர் ட்ரக், 'இலங்கையின் கைகளில் கண்ணாடியொன்றை கையளிக்கவுள்ளோம், அதனைப் பயன்படுத்தி இலங்கை பல சுயபரிசீலனைகளில் ஈடுபட வேண்டும்' என்றவாறாகத் தெரிவித்திருந்தார். அத்துடன், 'ஏற்றுக்கொள்ளுதல், வருத்தத்தைத் தெரிவித்தல், நீதியை நிலைநாட்டல், மீள நிகழாமையை உறுதிப்படுத்தல்' ஆகிய பொறிமுறைகள் ஊடாக இலங்கை தொடர்ந்தும் முன்னேற வேண்டும் என்றும் வலியுறுத்தியிருந்தார். ஆணையாளர் வோல்கர் ட்ரக்கின் கருத்துக்கும் ஸ்ரீலங்காவின் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினரும், முன்னாள் அமைச்சர்களும் வெளிப்படுத்தியிருக்கும் நடவடிக்கைக்கும் ஏதேனும் தொடர்பு காணப்படுகின்றதா? இலங்கை அரசியலில் அக்மீமன தயாரத்ன தேரர், வீரவன்ஸ தரப்பினருக்குப் பஞ்சமில்லை. இவ்வாறானவர்களை மையப்படுத்திச் சுழலும் உள்நாட்டுப் பொறிமுறையில் எவ்வாறு ஈழத் தமிழர்கள் நம்பிக்கைகொள்வார்கள்? பச்சிளம் குழந்தைகள் மீட்கப்படும் மனிதப் புதைகுழியை இராணுவத்தின் சிதிலங்கள் என்றுகூறும் கடைகெட்ட பேர்வழிகளிடம் நீதியை மட்டுமல்ல அதற்கான பூர்வாங்க நடவடிக்கைகளைக்கூட தமிழர்கள் எதிர்பார்க்கத் தயாரில்லை.



மன்னாரில் காற்றாலைத்திட்டம்

# உள்நாட்டு முதலீட்டாளர்களுக்கு அரசாங்கம் கதவடைப்பு

கொழும்பு, ஜூன் 29

**மன்னார் முள்ளிகுளம் பிரதேசத்தில் 50 மெகாவாட் திறன் கொண்ட இரண்டு காற்றாலை மின் உற்பத்தி நிலையங்களை அமைப்பதற்கான கேள்விப்பத்திரங்கள் கோரப்பட்டுள்ளபோதிலும், இந்தக் கேள்விப்பத்திரங்களை அனுகலை எரிசக்தி அமைச்சும் இலங்கை மின்சாரசபையும் உள்நாட்டு முதலீட்டாளர்களுக்கு வழங்க மறுத்துள்ளதாக அத்துறையின் தகவல்கள் தெரிவித்துள்ளன.**

தற்போதைய அரசாங்கத்தின்கீழ், மின்சாரசபையும் இந்தக் கேள்விப் பத்திரங்களைக் கோரியுள்ளது.

மன்னார், முள்ளிகுளத்தில் உள்ள இரண்டு வெவ்வேறு நிலப்பிரிவுகளில் தலா 10 நிலத்துண்டுகள் இந்தத் திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளன. இந்த இரண்டு மின் உற்பத்தி நிலையங்களையும் அமைப்பதற்கு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்களிடமிருந்து கேள்விப்பத்திரங்கள் கோரப்பட்டுள்ளன.

இருப்பினும், இந்தத் திட்டத்துக்கு உள்நாட்டு முதலீட்டாளர்களுக்கு வாய்ப்பு வழங்கப்பட்டாலும், கட்டுமானப்பணிகளை உள்நாட்டு நிறுவனங்களால் மேற்கொள்ளமுடியாதவகையில் கேள்விப்பத்திரப் படிவத்தில் நிபந்தனைகள் குறிப்பிடப்பட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. (ச–இ)



# நிஷாந்த கைது

கொழும்பு, ஜூன் 29

ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸ் நிறுவனத்தின் முன்னாள் தலைவர் நிஷாந்த விக்கிரமசிங்க, இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சாற்றுதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் தனது பதவிக் காலத்தின்போது விமானக் கப்பல் விரிவாக்கம் மற்றும் விமான ஒப்பந்தங்கள் தொடர்பான விமானநிறுவனத்தின் முடிவெடுக்கும் செயல்முறைகளில் முறைகேடு செய்தார் என்ற குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டுள்ளார். (ச–இ)



# துப்பாக்கிச்சூடு; ஐவர் கைது

அநுராதபுரம், ஜூன் 29

அநுராதபுரம் திரப்பனை கல்குலமப் பகுதியில் நடந்த துப்பாக்கிச்சூட்டு சம்பவம் தொடர்பாக ஐந்து பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். குறித்த துப்பாக்கிச்சூட்டில் காயமடைந்த நபரின் நண்பர்களே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்றும் அவர்களிடமிருந்து ஐஸ் போதைப்பொருள்களும் கைப்பற்றப்பட்டுள்ளன என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ச–இ)



# சா/த பரீட்சைப் பெறுபேறு ஜூலை மாத இறுதியில்

க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேறுகள் ஜூலை மூன்றாவது வாரத்தில் வெளியிடப்படும் எனப் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் ஏ.கே.எஸ். இந்திகா குமாரி லியனகே தெரிவித்துள்ளார். பரீட்சைப் பெறுபேறுகள் தொடர்பில் சமூக ஊடகங்களில் சமீபத்திய நாள்களில் பரவிவரும் பல்வேறு செய்திகள் தவறானவை. இதேவேளை, 2025 ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை நவம்பர் 10 ஆம் திகதி முதல் டிசெம்பர் 5ஆம் திகதி வரை நடைபெறும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச–இ)

# பஸ் சாரதிகளுக்கு ஆசனப்பட்டி கட்டாயம்

கொழும்பு, ஜூன் 29

பேருந்துச்சாரதிகளுக்கு நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமை முதல் ஆசனப்பட்டிகள் அணிவது கட்டாயமாக்கப்படவுள்ளதாக தேசிய போக்குவரத்துச் சபையின் தலைவர் பி.ஏ. சந்திரபாலா தெரிவித்துள்ளார்.

பயணிகளின் பாதுகாப்புக்கும் சர்வதேச தரம் வாய்ந்த நடைமுறைகளுக்கமைய போக்குவரத்துப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கும் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (ச–இ)

நாளை
திங்கட்கிழமை - ஆனி 16
30.06.2025
சுபநேரம் : 11.56- 01.26
ராகுகாலம் : 07.26-08.56

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** புதிய முயற்சி சாதகமாக முடியும். தேவையான பணம் கையில் இருந்தாலும், தேவையற்ற செலவுகளும் ஏற்படக்கூடும். உறவினர்கள் வருகையால் குடும்பத்தில் சில சங்கடங்கள் ஏற்படக்கூடும். மாலையில் நண்பர்களின் சந்திப்பு மகிழ்ச்சி தரும். அலுவலகத்தில் பணிகளில் கூடுதல் கவனம் தேவைப்படும் நாள்.

**இடபம்:** எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். சிலருக்கு வாழ்க்கைத்துணையால் எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. உறவினர்கள் வருகையால் சுபநிகழ்ச்சி ஒன்றுக்கான பேச்சு வார்த்தை சுமுகமாகமுடியும். அலுவலகத்தில் மகிழ்ச்சியான சூழ்நிலையே காணப்படும்.

**மிதுனம்:** அதிர்ஷ்டகரமான நாள். இன்று நீங்கள் எடுக்கும் புதிய முயற்சி வெற்றிகரமாகமுடியும். தொடங்கிய காரியங்கள் அனுகூலமாகமுடியும். உங்களுடைய் முயற்சிக்கு வாழ்க்கைத்துணை பக்கபலமாக இருப்பார். எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு

**கடகம்:** தந்தைவழி உறவுகளால் சங்கடம் ஏற்படக்கூடும். தந்தையின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. சகோதரர்களால் சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும். உறவினர்கள் வருகை மகிழ்ச்சி தரும். வாழ்க்கைத்துணையின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள்.

**சிம்மம்:** சுறுசுறுப்பாகச் செயற்படுவீர்கள். எதிர்பாராத செலவுகள் ஏற்பட்டாலும் தேவையான பணம் இருப்பதால் சமாளித்துவிடுவீர்கள். எதிரிகள் வகையில் எச்சரிக்கையாக இருக்கவும். உறவினர்களிடம்பேசும்போது பொறுமையைக்கடைப்பிடிக்கவும். மற்றவர்களிடம் வீண்விவாதத்தில் ஈடுபடவேண்டாம்.

**கன்னி:** புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். வழக்கமான பணிகளில் மட்டுமே கவனம் செலுத்தவும். சிலருக்கு மனதில் இனந்தெரியாத சோர்வு உண்டாகலாம். வெளியூர்ப் பயணம் மேற்கொள்வதைத் தவிர்க்கவும். உடல் நலனில் கவனம் தேவை.

**துலாம்:** கணவன் – மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். வாழ்க்கைத் துணையின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள். முக்கியமான முடிவுகள் எதையும் இன்று எடுக்க வேண்டாம். பிள்ளைகள் பிடிவாதம் பிடித்தாலும், விட்டுக்கொடுத்துச் செல்வது நல்லது.

**விருச்சிகம்:** எதிர்பாராத பணவரவுடன், திடீர் செலவுகளும் ஏற்படும். குடும்பத்தினரின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். நண்பர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். மாலையில் குடும்பத்துடன் வெளியில் சென்று வருவீர்கள். எதிரிகள் பணிந்துபோவார்கள்.

**தனுசு:** புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். அரசாங்கவகையில் எதிர்பார்க்கும் காரியம் முடிவதில் தாமதம் உண்டாகும். சிலருக்கு வயிறு தொடர்பான பிரச்சினைகள் ஏற்படக்கூடும். பிள்ளைகளால் தேவையற்ற செலவுகள் ஏற்படக்கூடும்.

**மகரம்:** சிலருக்கு சிறிய அளவில் ஆரோக்கியக்குறைவு ஏற்பட்டு சரியாகும். உறவினர்களுடன் பேசும்போது வீண் மனவருத்தம் ஏற்படக்கூடும் என்பதால், பொறுமையைக் கடைப்பிடிக்கவும். நண்பர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைப்பதில் தாமதம் ஏற்படக்கூடும்.

**கும்பம்:** கணவன் மனைவிக்கிடையே இருந்த கருத்துவேற்றுமை நீங்கி, அந்நியோன்யம் அதிகரிக்கும். மனதில் தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். காரியங்களில் வெற்றி உண்டாகும். புதிய முயற்சிகளைப் பிற்பகலுக்கு மேல் தொடங்குவது நல்லது.

**மீனம்:** முக்கியமான முடிவுகளை ஒருமுறைக்குப் பலமுறை யோசித்து எடுப்பது நல்லது. மற்றவர்களுடன் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். அலுவலகத்தில் மற்றவர்களின் விஷயங்களில் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது. பணிகளிலும் கவனமாக இருக்கவும்.

# தமிழ்ப் பண்பாடு சர்வதேச மாநாடு யாழ்.மாவட்டத்தில் நாளை

யாழ்ப்பாணம், ஜூன் 29

தமிழ்ப் பண்பாடு சர்வதேச மாநாடு நாளை ஆரம்பமாகி எதிர்வரும் ஜூலை 6ஆம் திகதி வரை யாழ்ப்பாணம், நுவரெலியா, கொழும்பு ஆகிய இடங்களில் நடைபெறவுள்ளது என்று மாநாட்டின் இணைப்பாளரும், தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தருமான பேராசிரியர் க. பாஸ்கரன் தெரிவித்துள்ளார். குறித்த மாநாட்டின் ஆரம்ப விழா நாளை திங்கட் கிழமை யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது. இதில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் சி. சற்குணராசா, கௌரவ விருந்தினராக இந்தியத் துணைத்தூதுவர் எஸ். சிறி சாய் முரளி, வடமாகாண பிரதம செயலாளர் தனுஜா முருகேசன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். குறித்த நிகழ்வில் சாதனையாளர் விருது வழங்கல், நூல் வெளியீடு, கருத்தரங்கு நிகழ்வுகள், கலைநிகழ்ச்சிகள் என்பனவும் இடம்பெறவுள்ளன. மாநாட்டுக்கான ஏற்பாடுகளை யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறையுடன் இணைந்து தஞ்சாவூர் சர்வதேசப் பண்பாட்டு ஆய்வுமையம், தமிழ்நாடு திருநெறி தமிழ் சைவசமய பாதுகாப்புப் பேரவை, லண்டன் தமிழ்க் கல்வியகம், இலண்டன் உலகச் செம்மொழித்தமிழ்ச் சங்கம், பிரான்ஸ் இந்திய வம்சாவளி மக்களுக்கான அமைப்பு ஆகியன ஒன்றுசேர்ந்து ஏற்பாடுசெய்துள்ளன. குறித்த நிகழ்வில் சுவிட்சர்லாந்து, கனடா, இங்கிலாந்து, நோர்வே, ஜேர்மனி, பிரான்ஸ், மலேசியா, சிங்கப்பூர், ரீயூனியன் தீவுகள், தென்ஆபிரிக்கா, இந்தியா, இலங்கை ஆகிய நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் பங்கேற்கவுள்ளனர்.

இதேவேளை ஜுலை 2ஆம் திகதி நுவரெலியா மாவட்டச்செயலக மண்டபத்திலும் 6ஆம் திகதி கொழும்பு மயூரபதி ஸ்ரீபத்ரகாளி அம்மன் ஆலயப் பண்பாட்டுக் கலையரங்கிலும் இந்த மாநாடு இடம்பெறும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-20-66)

# மாவைக் கந்தனுக்கு நாளை கொடியேற்றம்

யாழ்ப்பாணம், ஜூன் 29

மாவிட்டபுரம் ஸ்ரீ கந்தசுவாமி கோயில் மஹோற்சவத் திருவிழா நாளை திங்கட்கிழமை நண்பகல் 12.06மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. தொடர்ந்து 25 தினங்கள் நடைபெறும் உற்சவம் எதிர்வரும் ஜுலை மாதம் 27ஆம் திகதி ஆடி அமாவாசையோடு நிறைவடையும். தினமும் காலை, மாலை 3காலத் திருவிழா நடைபெறும். கொடியேற்றத்திலன்று அதிகாலை 4.30மணிக்கு அபிஷேக ஆராதனை, பூர்வாங்கக் கிரியைகள் நடைபெற்று தொடர்ந்து காலை 10.15மணியளவில் வசந்த மண்டபப் பூஜை இடம்பெறும். எதிர்வரும் ஜுலை மாதம் 22ஆம் திகதி சப்பறத்திருவிழாவும் 23ஆம் திகதி தேர்த்திருவிழாவும் 24ஆம் திகதி தீர்த்தத்திருவிழாவும் நடைபெறவுள்ளன. (ச-41)

# நாடக விழா

யாழ்ப்பாணம், ஜூன் 29

மானிப்பாய் இந்துக் கல்லூரியின் நாடக விழா-2025 நிகழ்வு நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமையும் மறுநாள் புதன்கிழமையும் மாலை 6 மணிக்கு கல்லூரியின் துரைராஜா திறந்தவெளி அரங்கில் அதிபர் துரைரட்ணம் திலீப்குமார் தலைமையில் இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கிழக்குப் பல்கலைக்கழகம், மட்டக்களப்பு நுண்கலைத்துறை நாடகப் பேராசிரியர் சி. ஜெயசங்கர், சிறப்பு விருந்தினர்களாக லண்டன் பழைய மாணவர் சங்கத்தைச் சேர்ந்த தர்மரட்ணம் ரவீந்திரமோகன், ஆறுமுகதாசன் திருமூலன், பிரதம நடுவராக யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற்கல்லூரி உபபீடாதிபதி சிரேஸ்ட விரிவுரையாளர் பா.தனபாலன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

முதலாம் நாள் ஆற்றுகைகளாக மாணிக்கவாசகர், வாகீசர் இல்ல மாணவர்களின் நாடக ஆற்றுகை, ஆசிரியர்களின் வள்ளி திருமண இசை நாடக ஆற்றுகை என்பனவும் இரண்டாம் நாள் நிகழ்வுகளாக சம்பந்தர், சுந்தரர் இல்ல மாணவர்களின் நாடக ஆற்றுகை, பழைய மாணவர்களின் நாடக ஆற்றுகை என்பனவும் இடம்பெறவுள்ளன. (ச-41)

# ஒன்றுகூடல்

யாழ்ப்பாணம், ஜூன் 29

சுதந்திர மனித உரிமைகள் அமைப்பின் புதிய அங்கத்தவர் ஒன்றுகூடல் நிகழ்வு, அமைப்பின் வடமாகாணத் தலைவர் கலாநிதி ஆர்.எம் புண்ணியமூர்த்தி தலைமையில், யாழ். கியூடெக் கரித்தாஸ் மண்டபத்தில் எதிர்வரும் 3 ஆம் திகதி வியாழக் கிழமை காலை 9.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

யாழ்.பிராந்திய ஒருங்கிணைப்பாளர் கலாபூஷணம்செ.யோசப்பாலா, எப்.எச்.ஆர்.ஓ. இயக்குநர் கலாநிதி ரி. கபில ஆர்.பெர்னாண்டோ, யாழ்.பல்கலைக்கழக சட்டத்துறைத் தலைவர் திருமதி கோசலைமதன், எப்.எச்.ஆர்.ஓ. மாகாண ஒருங்கிணைப்பாளர் கலாநிதி த.திலீபன், யாழ். மாவட்ட ஊடக இயக்குநர் திருவாளர் ஜோன் அகிலன், யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்பாளர் இரா.மதிகரன் ஆகியோர் நிகழ்வை சிறப்பிக்கவுள்ளனர். (ச-25)

# சான்றிதழ் வழங்கல்

யாழ்ப்பாணம், ஜூன் 29

சுதந்திர மனித உரிமைகள் அமைப்பினால் நடத்தப்பட்ட கட்டுரை மற்றும் பேச்சுப்போட்டிகளில் பங்குபற்றி வெற்றியீட்டிய, மாணவர்களுக்குப் பரிசில் வழங்கும் நிகழ்வு, அதிபர் அ.ஆனந்தராசா தலைமையில் எதிர்வரும் 3ஆம் திகதி வியாழக்கிழமை கனகெரட்ணம் ம.ம. வித்தியாலயத்தில், நண்பகல் 12 மணிக்கு இடம்பெறவுள்ளது. இதன்போது பட்டிமன்றம், மரநடுகை என்பனவும் இடம்பெறவுள்ளன. நிகழ்வில் பிரதம விருந்தினராகக்கலாநிதிரி. கபில ஆர்.பெர்னாண்டோ கலந்துகொள்ளவுள்ளார். (ச-25)

# மஞ்சவனப்பதிக்கு கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், ஜூன் 29

கொக்குவில் அருள்மிகு மஞ்சவனப்பதி முருகன் ஆலய மஹா கும்பாபிஷேக விஞ்ஞாபனம் எதிர்வரும் ஜுலை மாதம் 7ஆம் திகதி திங்கட்கிழமை காலை 6மணி முதல் 6.45மணி வரையுள்ள சுபமுகூர்த்த வேளையில் இடம்பெறவுள்ளது.

நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமை அதிகாலை 5.30மணியளவில் கர்மாரம்பமும் 4ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 4மணிக்கு யாகாரம்பமும் 5ஆம் திகதி சனிக்கிழமை காலை 10மணி முதல் 6ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மதியம் 12மணி வரை எண்ணெய்க்காப்பும் இடம்பெறவுள்ளன. கிரியா காலங்களில் தினமும் விஷேட நிகழ்வுகளாக இசை நிகழ்ச்சிகள் இடம்பெறும். அடியார்கள் ஆசார சீலர்களாய் வருகைதந்து தங்களால் இயன்ற திரவியங்களை வழங்கி முருகன் அருளைப் பெறுமாறு [illegible]த்தா சபையினர் தெரிவித்துள்ளனர். (ச-41)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



## வள்ளியம்மை சுப்பிரமணியம்

இலங்கை-சுளிபுரம் கே. ஏ. எஸ். சத்தியமனை நூலகத்தின் நிறுவனர் வள்ளியம்மை சுப்பிரமணியம் அவர்கள் கடந்த (26.06.2025) காலை காலமானார்.

சுளிபுரம் பத்திரகாளி கோவிலடி, காலஞ்சென்றவர்களான ஆசைப்பிள்ளை - செல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும், ஆசைப்பிள்ளை பொன்னையாவ (கல்வி அதிகாரி), திருமதி இலட்சுமிப்பிள்ளை சிவசுப்பிரமணியம் (ஆசிரியர்) அவரகளின் சகோதரியும், பொதுவுடமைவாதியான காலஞ்சென்ற தோழர் கே ஏ. சுப்பிரமணியம் அவர்களின் வாழ்க்கைத் துணைவியாரும், காலஞ்சென்ற சத்தியராசன் (மீரான் மாஸ்டர்), சத்தியமலர் இரவீந்திரன், எஞ்சினியர் சத்தியகீர்த்தி சுப்பிரமணியம் ஆகியோரின் அருமைத் தாயாரும், கலாநிதி நடேச்ன் இரவீந்திரன், டாக்டர்-சுசித்திரா சத்தியகீர்த்தி ஆகியோரின் அருமை மாமியாரும், எஞ்சினியர் - சோலைராஜ் ஶ்ரீராம் (அமெரிக்கா), டாக்டர்-சுப்ாரா ஶ்ரீராம் (அமெரிக்கா), சுமண்யன் இரவீந்திரன் (கனடா) , அரசி சுமண்யன் (கனடா) , டாக்டர்-ஶ்ரீரஞ்சனி லியனகே (அவுஸ்திரேலியா) , டாக்டர்-ஶ்ரீராஜ் சத்தியகீர்த்தி (அவுஸ்திரேலியா) ஆகியோரின் பாசம் மிக்க பாட்டியும் சாரவ், வியன், சாயன், அகன், அஞ்சலி ஸ்கை லியனகே ஆகியோரின் அருமை மிக்க பூட்டியுமாவார்.

இறுதி நிகழ்வுகள் கே. ஏ. எஸ். சத்தியமனை நூலகத்தில் நாளை (30.06.2025) முற்பகல் 9.30 மணியளவில் ஆரம்பமாகி சுழிபுரம் திருவடிநிலை மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

திரு நடேசன் - இரவீந்திரன் - +94 718207252
திரு-ஆசைப்பிள்ளை- பொன்னையா - +94 776052567
திருமதி சத்தியமலர் இரவீந்திரன் - +94 77 078 0657

தகவல் :
குடும்பத்தினர்

(CR/45376) J-1

# CONSULATE GENERAL OF INDIA JAFFNA

Consulate General of India, Jaffna, invites tenders from reputed and experienced housekeeping/cleaning service providers, registered in Sri Lanka for providing housekeeping/cleaning services for its office located at 14, Maruthady Lane, Nallur, Jaffna. Details of the notice inviting tender can be obtained from the following websites:

https:/www.cgijaffna.gov.in
https:/eprocure.gov.in/epublish/app

The bids can be submitted upto 13th July, 2025 at 1700 hrs. For any clarification, please write to hoc.jaffna@mea.gov.in or call at 021-2220505, 504.

# Consulate General of India, Jaffna

Advt. No. JAF/ADM/578/01/2025

The Consulate General of India, Jaffna is looking for a suitable candidate for filling up one (1) vacancy of the post of "Librarian". Only Sri Lankan Nationals of age limit 35 Years with minimum Graduation level qualification can apply. Details of the vacancy and the application form are available on Consulate's web site **https://www.cgijaffna.gov.in**

Interested candidates are requested to download the application form and submit the completed form by Post or in person to **Head of Chancery, Consulate General of India, at 14, Maruthady Lane, Nallur, Jaffna by 12 July, 2025.**


## இஸ்ரேல் மீது ஹவுத்தியால் தாக்குதல்!

ஹவுத்தி போராளிகளால், இஸ்ரேல் மீது நேற்று ஏவுகணைத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. கடந்த இரண்டு வாரங்களாக நேரடி மோதலில் ஈடுபட்டு வந்த இஸ்ரேலுக்கும், ஈரானுக்கும் இடையில் அண்மையில் அமைதிப் பேச்சுவார்த்தைகள் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டிருந்தன. இவ்வாறான நிலையிலேயே, இஸ்ரேல் மீது ஹவுத்தி ஏவுகணைத் தாக்குதலை நடத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

# மரண அறிவித்தல்

பிறப்பு
22 . 01 . 1953

இறப்பு
25 . 06 . 2025



## செல்லத்தம்பி ரவீந்திரன்

(R.V. TEX , R.S TEX யாழ்ப்பாணம் உரிமையாளர்)

புதிய வீதி ஆறுகால் மடம் ஆணைக்கோட்டையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்தம்பி ரவீந்திரன் அவர்கள் கடந்த (25.06.2025) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்தம்பி-மகேஸ்வரி தம்பதியரின் பாசமிகு மகனும், திலகவதி (பவானி) யின் அன்புக்கணவரும், காலஞ்சென்றவர்களான கந்தசாமி - ஞானாம்பிகையின் தம்பதியரின் அன்பு மருமகனும் ஆவார்.

அன்னார் பார்த்தீபன் (கனடா), பாமினி (லண்டன்), பிருந்தன், காலஞ்சென்ற சுதாகர், மற்றும் விஜிதா (கனடா), ஆகியோரின் பாசமிகு தந்தையும், பாமினி, ராஜ்குமார், ராதா, தாரகா, கரிகரன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும், அப்சனா, அபிஷாந், அக்ஷயன், அஸ்மிதன், லெசிகா, டயானிக்கா, சிவாஜினி, கரிராம், கர்சினி ஆகியோரின் பாசமிகு பேரனும், காலஞ்சென்றவர்களான மகேந்திரராஜா, தர்மபாஸ்கரன், உஷாதேவி மற்றும், நகேஸ்வரன், கமலாதேவி, காலஞ்சென்ற பிரபாகரன் மற்றும் சதாகரன், சிறிதரன், கொங்காதரன், ஆகியோரின், பாசமிகு சகோதரனும், ஞானரூபன், பிரதீபன், கோகுலன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (30.06.2025) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது வீட்டில் இடம்பெற்று நல்லடக்கத்திற்காக கோம்பயன் மணல் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் - குடும்பத்தினர்

# கண்ணீர் அஞ்சலி

தோற்றம்
14 . 09 . 1934

மறைவு
26 . 06 . 2025



## திருமதி திலகேஸ்வரி அருளம்பலம்

ஜெயபாலன் - Commercial Bank பிராந்திய முகாமையாளர் வடமாகாணம் அவர்களின் அன்புத் தாயார் **திலகேஸ்வரி அருளம்பலம்** அவர்கள் இறைபதம் அடைந்த செய்தி கேட்டு ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்தோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**உரிமையாளர் மற்றும் ஊழியர்கள்**
New Ram construction (pvt) LTD
Hotel Lovusiyah (pvt) LTD
Jls Mithiraa (pvt) LTD
No 42 clock tower Roda Jaffna

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# பிச்சாண்டவர் உற்சவம்

யாழ்ப்பாணம், ஜூன் 29
புலோலி பார்வதவர்த்தனி சமேத பசுபதீஸ்வரர் (பருத்தித்துறை - சிவன் கோவில்) தேவஸ்தான வருடாந்தத் திருவிழாவின் 14 ஆம் உற்சவமான பிச்சாண்டவர் உற்சவத்தை முன்னிட்டு நாளை திங்கட்கிழமை காலை 9 மணியளவில் எம்பெருமான் கிராம ஊர்வலம் மேற்கொள்ளவுள்ளார்.
பெருமான் ஆலயத்திலிருந்து எழுந்தருளி, பிரதான வீதியூடாக வீதிவலம் வரும் வேளையில் அடியார்கள் வீதிகளைத் துப்புரவுசெய்து பூரண கும்பம் வைத்துப் பெருமானைத் தரிசித்து இஷ்டசித்திகளைப் பெற்றுய்யுமாறு ஆலய தேவஸ்தானம் கேட்டுக்கொண்டுள்ளது. (ச-41-100)




## மின்சாரம் தாக்கி சிறுமி உயிரிழப்பு

வவுனியா, ஜூன் 29
மதவாச்சி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் மின்சாரம் தாக்கியதில் 8 வயதுச் சிறுமி ஒருவர் உயிரிழந்துள்ளார்.
சங்கிலிகந்தராவப் பகுதியில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.
வீட்டில் நீர் சூடாக்கியைப் பயன்படுத்தியபோதே அவரை மின்சாரம் தாக்கியுள்ளதாக விசாரணையில் தெரியவந்துள்ளது.
சிறுமியின் சடலம் மதவாச்சி மருத்துவமனையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. (ச-இ)



# சூடு கண்ட பூனை அடுப்பங்கரை நாடாது

### மரிக்கார் தெரிவிப்பு

உள்ளூராட்சிசபைத் தேர்தலில் அரசு கடும் வீழ்ச்சியைச் சந்தித்துள்ளதால் மாகாண சபைத் தேர்தலை அரசு நடத்துவதற்கு வாய்ப்பில்லை என்று ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.மரிக்கார் தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் கூறுகையில்,
உள்ளூராட்சிசபைத் தேர்தலில் அரசு கடும் வீழ்ச்சியைச் சந்தித்துள்ளது. இந்த நிலையில் மாகாணசபைத் தேர்தலை நடத்தினால் அரசு மேலும் வீழ்ச்சியடையும். தோல்வியடையும். எதிர்க்கட்சி வெல்வதற்கு வாய்ப்புண்டு.
இதன் காரணமாக அரசு எப்படியும் தேர்தலை நடத்தாது. வென்றாலும் தோற்றாலும் தேர்தல் நடத்தவேண்டும். அதுதான் ஜனநாயகம். மஹிந்தகூட தேர்தலை உரிய நேரத்தில் நடத்தினார். இந்தத் தேர்தலில் அரசு எதிர்பார்த்த வெற்றி கிடைத்திருந்தால் அந்த சூட்டோடு மாகாணசபைத் தேர்தலை நடத்தியிருப்பார்கள் - என்றார். (ச-75)

### வலி.மேற்கில்

# புனரமைப்பற்ற வீதிகளை பதிவுசெய்ய நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 29
வீதி அபிவிருத்திப் பணிகளுக்கான வீதியின் பெயரை முன்மொழிந்து விரைவாக சமர்ப்பிக்குமாறு வலி.மேற்குப் பிரதேசசபையின் தவிசாளர் ச.ஜெயந்தன் கேட்டுக்கொண்டுள்ளார். வலி.மேற்குப் பிரதேசசபையின் மாதாந்த அமர்வு இடம்பெற்றபோது இந்தக் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.
"நூற்றுக்கணக்கான வீதிகள் கடந்த சபையின் காலத்தில் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டு புனரமைக்கப்பட்டன. இதேவேளை இம்முறை ஒவ்வொரு உறுப்பினர்களும் உங்களது வட்டாரத்தில் காணப்படுகின்ற வீதிகளைப் பிரதேசசபையின் அறிவுறுத்தலுக்கமைவான நியமங்களைக் கொண்டிருப்பின் அதனை பதிவு செய்து சமர்ப்பிப்பின் எதிர்காலத்தில் குறித்த வீதிகள் புனரமைக்கப்படும்" என்றும் வலி.மேற்குப் பிரதேச சபைத் தவிசாளர் தெரிவித்தார். (ச-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பசுமை அமைதி விருதுகள் யாழ்.மாவட்டத்தில் இன்று

யாழ்ப்பாணம், ஜூன் 29

தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் 2024ஆம் ஆண்டுக்கான பசுமை அமைதி விருதுகளை வழங்கும் பரிசளிப்பு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இதில் கடந்த ஆண்டு தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தினால் அகில இலங்கை ரீதியாக நடத்தப்பட்ட சூழல் பொதுஅறிவுப் பரீட்சையில் வெற்றிபெற்ற மாணவர்கள் சூழலியல் ஆசான் க.சி. குகதாசனுக்கு ஞாபகார்த்தப் பசுமை அமைதி விருதுகளும், 2024ஆம் ஆண்டின் சிறந்த சூழல்நேயச் செயற்பாட்டாளர் தாலகாவலர் மு.க. கனகராசா ஞாபகார்த்தப் பசுமை அமைதி விருதும் வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளனர்.

தொடர்ந்து மாணவர்களிடையே நடத்தப்பட்ட வீட்டுத்தோட்டப் போட்டியில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு மாணாக்க உழவர் மதிப்பளிப்பும், தாவரங்களை அடையாளம் காணும் போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்குத் தாவராவதானி மதிப்பளிப்பும் இடம்பெறவுள்ளது.

தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் பிரதம விருந்தினராக வவுனியாப் பல்கலைக் கழகத்தின் பதில் துணைவேந்தர் பேராசிரியர் யோ. நந்தகோபன் கலந்துகொள்ளவுள்ளார். (ச-27)

# பொலிஸ் காவலில் 79 பேர் உயிரிழப்பு

கொழும்பு, ஜூன் 29

கடந்த ஐந்து ஆண்டுகளில் 79 சந்தேகநபர்கள் பொலிஸ் காவலில் இருந்தபோது அல்லது கைது நடவடிக்கைகளின்போது உயிரிழந்துள்ளனர் என இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. 49 சந்தேகநபர்கள் காவலில் இருந்தபோது உயிரிழந்தனர் என்றும் 30 பேர் கைது நடவடிக்கைகளின்போது உயிரிழந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் கைது நடவடிக்கைகளின் போதும் அதற்குப் பின்னரும் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் தொடர்பில் பொலிஸாருக்கு வழிகாட்டுதல்களை வழங்க ஆணைக்குழு நடவடிக்கை எடுத்துள்ளது. (ச-இ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



**தோற்றம்**

**24 . 05 . 1956**

**மறைவு**

**20 . 06 . 2025**

## அசோகமலர் அருந்தவநாதன் (மாலா)

**(நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி பழையமாணவி)**

யாழ். நீர்வேலி தெற்கு கந்தசாமி கோவிலடியைப் பிறப்பிடமாகவும், பிரித்தானியா Harrow ஐ வசிப்பிட மாகவும் கொண்ட அசோகமலர் அருந்தவநாதன் அவர்கள் கடந்த (20-06-2025) வெள்ளிக்கிழமை நீர்வைக்கந்தனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவலிங்கம் - இராசம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ் சென்றவர்களான கந்தையா - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், அருந்தவநாதன் அவர்களின் அன்பு மனைவியும், துளசி, கோபிநாத் ஆகியோரின் பாசமிகு தாயாரும், பத்மநாதன், மாதினி ஆகியோரின் பாசமிகு மாமியாரும், காலஞ்சென்ற கதிர்காமத்தம்பி மற்றும் செல்வராணி, இந்திராணி, அசோக்குமார் ஆகியோரின் அன்புச் சகோதரியும், கதிரமலை ஜெகசோதி, பத்மநாதன், கமலேஸ்வரி, மங்களேஸ்வரி, காலஞ்சென்றவர்களான மகாத்மசீலன், சிவலிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனியும், காலஞ்சென்றவர்களான செல்வரத்தினம், ஆனந்தவேல் மற்றும் சோதிலிங்கம், ஆகியோரின் பாசமிகு மருமகளும், கனடாவைச் சேர்ந்த மாலதி, மதன்ராஜ், செந்தூரன், தர்மினி, ரஞ்சினி ஆகியோரின் அன்புச் சிறியதாயாரும், கனடாவைச் சேர்ந்த சுபன், சுமணன், சுபாங்கி, தினேஷ், பிரியா(காயத்ரி), உதயா(பத்மகௌரி), ஷாமி(சண்முகப்பிரியா) ஆகியோரின் அன்பு மாமியும், அர்ஜுன், மாயன், கைலன் ஆகியோரின் பாசமிகு பேத்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.06.2025) ஞாயிற்றுக்கிழமை லண்டனில் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**நாதன் (கணவர்)**
**+44 740 401 5139**
**+44 208 864 3399**

**தகவல் :**
**குடும்பத்தினர்**

(CS/58723) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
01 . 08 . 2004



மறைவு
29 . 06 . 2022

கடந்த 29.06.2022 அன்று சரவணை கதிரவேலாயுதசுவாமி தீர்த்தக்கேணியில் துப்பரவு பணிக்குச் சென்று அகாலமரணமடைந்த

அமரர்
**சதானந்தன் விதுஷன்**

ஆண்டுகள் மூன்று மறைந்து விட்டாலும்
அகலுமா உங்கள் பிரிவின் சோகம்
ஆறவில்லை நம் இதயம் எங்கள் உயிர்
உள்ளவரை உங்கள் நினைவுகள் என்றும்
எம் மனதை விட்டு நீங்காது உங்கள்
ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்

சரவணை மேற்கு,
வேலணை, உம் வட்டாரம்

(CS/55517) J-1

குடும்பத்தினர்
076 915 1026





# Your Journey to Leadership Begins Here

If you are looking for a career that will help you stand tall, join People's Leasing & Finance PLC (PLC) and fulfill or unleash your potential to change your world. PLC is a public quoted company with enduring vision of being a vibrant award winning financial service provider and a superior player in the last 29 years of non – banking financial service landscape. PLC is spreading its wings across the island wide 110 branch network.

Whether you want a career that could take you to the top or to be a game changer or sinply take you in an exciting new direction, PLC Provides opportunities, support and reward that would push you towards greater heights. Today, People's Leasing & Finance PLC is also a formidable group of 6 subsidiary companies comprising of People's Insurance PLC, People's Leasing Fleet Management Limited, People's Leasing Property Development Limited, People's Micro Commerce Limited and People's Leasing Havelock Properties Ltd and Alliance Finance Bangladesh. We are also driven by a performance culture with an unmatched level of quality and integrity by ethical business practices. Hence our brand reputation is held in high esteem. Also, our credentials have been endorsed by Fitch Ratings A (lka) Outlook Stable.

**Management Trainees**

If you are an individual below 30 years of age with innovative ideas and have the passion to reach the pinnacle of corporate world and also highly result oriented, dynamic and energetic with an outgoing personality of high caliber who reflect the values created by People's Leasing group. If you want to be a part of the winning team and match the profile, you could be the person we are looking for.

Selected applicants will be provided with the opportunity to embark on a challenging journey and climb the corporate ladder with professional guidance.

**Qualifications Required:**

- A Degree from a recognized university (preferably with a class) in the fields of Management / Commerce / Finance / Accounting / Law / Marketing / Business Administration / Information Technology / Insurance / Economics / Science or full professional qualification from any recognized professional bodies.
- Having work experience would be an added advantage.

**Skills & Competencies:**

- You should demonstrate a high level of written and oral communication / presentation skills and leadership competencies that outline abilities, characteristics and behavior needed to meet the challenges in business.

**Rewards:**

- A comprehensive training programme will be provided with an attractive remuneration package in keeping with the current Industry standards. Additional fringe benefits are on offer depending on individual performance level and outgoing qualities.

**Any form of canvassing will be regarded as a disqualification.**

*Applicants are invited to submit comprehensive curriculum vitae with names of two non – related referees, copies of relevant certificates along with a passport size photograph to the address given below on or before 10th July 2025.*

**Application should be sent to:**
Group Head of HR,
People's Leasing & Finance PLC.
No.1161, Maradana Road, Colombo 08.
Web: www.plc.lk | E-mail – careers@plc.lk
We will correspond only with applicants shorts listed for interview.

PLC PEOPLE'S LEASING
THE TRUSTED LEADER


# அர்ஜுன மகேந்திரனை நாட்டுக்கு கொண்டுவரும் முயற்சியில் அரசு

கொழும்பு, ஜுன் 29
மத்திய வங்கி பிணைமுறி மோசடியுடன் தொடர்புபட்ட முன்னாள் ஆளுநர் அர்ஜுன மகேந்திரனை இலங்கைக்குக் கொண்டுவருவதற்குரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகின்றது என்று பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்தார்.

தொலைக்காட்சியொன்றில் ஒளிபரப்பான அரசியல் விவாத நிகழ்வொன்றின் போது எழுப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
இது தொடர்பில் சில நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. அவர் சிங்கப்பூர் பிரஜையென்பதால் சட்டரீதியிலான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு சிற்சில தடங்கல்கள் உள்ளன. எனினும், இது பற்றி நாம் மீண்டும் அவதானம் செலுத்தியுள்ளோம். அவரை நாட்டுக்குக் கொண்டுவருவதற்குள்ள இயலுமை தொடர்பில் கருத்துகள் பெறப்பட்டுவருகின்றன. விசாரணைகளும் இடம்பெறுகின்றன.

இராஜதந்திர மட்டத்தில் தற்போது முயற்சி எடுக்கப்பட்டுவருகின்றது. நாம் முயற்சியை இன்னும் கைவிடவில்லை. தேவையான சட்டங்கள் இயற்றப்பட்டுவருகின்றன. புதிய சட்டங்கள்மூலம், விசாரணைகளை புதிய கட்டத்துக்குக் கொண்டுவரமுடியும் - என்றார். (ஏ-44)



# வேலணைப் பிரதேச பண்பாட்டு விழா

யாழ்ப்பாணம், ஜுன் 29
வட மாகாணப் பண்பாட்டலுவல்கள் அலகின் அனுசரணையுடன் வேலணைப் பிரதேச செயலகம், பிரதேச கலாசாரப் பேரவை ஆகியவற்றின் இணை ஏற்பாட்டில், பிரதேசப் பண்பாட்டுவிழா வேலணை த்துறையூர் ஐயனார் சனசமூக நிலைய நாடகக் கலைஞர் அமரர் செல்லையா சிவராசா அரங்கில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. வேலணைப் பிரதேசசெயலர் க.சிவகரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், பிரதம விருந்தி னராக வடக்கு ஆளுநர் நா.வேதநாயகன், சிறப்பு விருந்தினர்களாக பண்பாட்டலுவல்கள் அலகின் பிரதிப் பணிப்பாளர் திருமதி நி.லாகினி, ஓய்வுபெற்ற பிரதம செயலாளர் இ.இளங்கோ வன், கௌரவ விருந்தின ராக சரவணை மேற்கு மூத்தகலைஞர் கலாபூஷணம் ம.கந்தையா ஆகியோர் கலந்து கொண்டனர். (ச-25,159,113)

# தாய்,சேய் கிளினிக்குகளில் ஒழுங்கற்ற சிகிச்சைகள்

## மாந்தை மக்கள் அவஸ்தை

மன்னார், ஜுன் 29
மாந்தை கிழக்கில் தாய்,சேய் கிளினிக் நிலையங்களில் ஒழுங்கற்ற நிலையில் சிகிச்சை இடம்பெறுகின்றது என்று பிரதேச மக்கள் குற்றஞ்சாட்டி யுள்ளனர். மாந்தை கிழக்கு சுகாதார மருத்துவ அதிகாரிப் பணிமனையின்கீழ் இயங்கும் கர்ப்பிணிகளுக்கான சிகிச்சை, தடுப்பூசி வழங்கும் பிரிவுகள் ஒழுங்காக இயங்குவதில்லை. கிளினிக் நாள்களும் அடிக்கடி மாற்றப்படுகின்றன. ஒரேயொரு பேருந்து சேவை நடைபெறும் இந்தப் பகுதியில் காலை 7 மணிக்கே தாய்மார் அழைக்கப்படுகின்றபோதிலும் மருத்துவர் மு.ப. 10 மணிக்கே வருகைதருகிறார். இதனால் 3 ஆயிரம் ரூபா செலவழித்து முச்சக்கர வண்டிகளில் 40 கிலோமீற்றர் தூரம் செல்வோர் சிரமங்களுக்கு உள்ளாகின்றனர். எனவே இதுதொடர்பில் சுகாதாரத் திணைக்கள அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச-25,9)

# தடுப்புக் கைதிகளின் விடுவிப்பில் சந்தேகம்

## சட்டமா அதிபர் திணைக்களம் தெரிவிப்பு

கொழும்பு, ஜுன் 29
குற்றப் புலனாய்வுப் பிரிவின் சிறப்புக் கவனத்துக்குரிய பல தடுப்புக் கைதிகள் சிலர் சிறைச்சாலைகளில் இருந்து சந்தேகத்துக்கு இடமான முறையில் விடுவிக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

சட்டமா அதிபர் திணைக்களத்தின் பிரதி சொலிசிட்டர் ஜெனரல் சுஹர்ஷி ஹேரத் ஜயவீர அண்மையில் கொழும்பு பிரதான நீதவான் தனுஜா லக்மாலி ஜயதுங்கவிடம் இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

விடுவிக்கப்பட்ட கைதிகளின் பட்டியலில் அவர்களின் பெயர்கள் குறிப்பிடப்படவில்லை என்றாலும், அந்தச் சிறைச்சாலைகளின் நுழைவுப் பதிவேடுகளில் விடுவிக்கப்பட்டவர்களின் பெயர்கள் உள்ளன என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். ஜனாதிபதி பொதுமன்னிப்புக்குத் தகுதியற்ற ஒருவர் அநுராதபுரம் சிறைச்சாலையில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளார் என்ற குற்றச்சாட்டுத் தொடர்பான வழக்கு நீதிமன்றத்தில் மீண்டும் விசாரணைக்கு வந்தபோது, மேலதிக அறிக்கை ஒன்றைச் சமர்ப்பித்த பிரதி சொலிசிட்டர் ஜெனரல் இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளார். (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மீளப்பெறப்பட்டது காணி சுவீகரிப்பு வர்த்தமானி

வடமாகாணத்தில் காணி சுவீகரிப்புத் தொடர்பில் அரசாங்கத்தால் வெளியிடப்பட்டிருந்த வர்த்தமானி அறிவித்தல் தற்போது மீளப் பெறப்பட்டுள்ளது. வடக்கு மாகாணத்தில் ஒட்டுமொத்தமாக 5 ஆயிரத்து 940 ஏக்கர் காணிகளை 3 மாதகாலத்துக்குள் எவரும் உரிமை கோராதுவிடின், அவற்றை அரச காணிகளாகப் பிரகடனப்படுத்தும் வகையில் கடந்த மார்ச் மாதம் வர்த்தமானி வெளியிடப்பட்டிருந்தது. இந்த வர்த்தமானி அறிவித்தலுக்கு நீதிமன்றம் இடைக்காலத் தடை விதித்தைத் தொடர்ந்தே, அந்த வர்த்தமானியைத் திரும்பப் பெற்று புதிய வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது. (ம-இ)


### மலிவு விற்பனை

- A.C
- சாப்பாட்டு மேசை, கதிரை
- T.V வாங்கில்கள்
- சைக்கிள்
- பிளாஸ்ரிக் கதிரைகள்
- Shoe rack உடுப்பு போடும் கங்கர்

077 724 2427, 077 741 2713

### தேவை

யாழ் நகரிலுள் அரைக்கும் ஆலைக்கு பில் கிளாக், பொதியிடல், பயிலுனர், அனுபவம் உள்ளவர்கள் (2000/=) என்பவற்றிற்கு பெண் ஊழியர்கள் தேவை.

தொடர்பு:-076 297 7078

### அறைகள் வாடகைக்கு

யாழ் பல்கலைக்கு அருகில் பெண்களுக்கான அறைகள் மாதாந்த வாடகைக்கு வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு:
076 979 2949

### உடனடி வேலைவாய்ப்பு

வடமாகாணத்தில் பிரபல்யமான கம்பனிக்கு முகாமையாளர் அலுவலக உத்தியோகத்தர்கள் தேவை.
O/L, A/L ஆண்/பெண்
தொடர்பு:074 183 5645

### அறை Unit விற்பனைக்கு

யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணை சிவன் கோவில் அருகாமை காங்கேசன்துறை வீதி. வெள்ளிவிலாஸ் ஒடையில் இல 424/3. அறை 9X8 அடி அகலம். தனிமின்சார நீர்வசதி. நகைத் தொழில். களஞ்சியம். காரியாலையமாகப் பாவிக்கக் கூடியது.

தொடர்பு: 077 375 1649

### THE ROYAL COLLEGE OF JAFFNA

தனியார் கல்வி நிறுவனம்-சங்கானை ஆண்டு 10. O/L, A/L கலைப்பிரிவு மாணவர்களுக்கு சிறு குழுக்களாக சிறந்த ஆசிரியர்கள் மூலம் வகுப்புக்கள்.
பிரான்பற்று வீதி. சங்கானை பஸ் நிலையம் அருகாமை.

தொடர்பு: 077 675 1649

### மீசாலை கிழக்கில்

காணி விற்பனைக்கு

மீசாலை கிழக்கில் வீடு கட்டுவதற்கு அல்லது வியாபாரத்திற்கு சிறந்த 5 பரப்பு நிலம் விற்பனைக்குண்டு

தொடர்பு 0776 544 540 (தரகர் தேவையில்லை)

### வேலையாள் தேவை

கிளிநொச்சி நகரில் இயங்கும் ஹாட்வெயார் நிறுவனத்திற்கு கணக்காளர் தேவை.
(இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்)
CV Whatsapp செய்யவும்
Whatsapp No - 077 717 0624 , 021 228 3663

### G.C.E.(O/L) தகைமையுடன் லண்டன்(UK) செல்வதற்கான ஓர் அரிய வாய்ப்பு

100% உத்தரவாதம்

- IELTS தேவையில்லை,
- குறைந்த கட்டணத்தில் லண்டன் செல்வதற்கான ஏற்பாடுகளை எமது நிறுவனம் செய்து கொடுக்கிறது.
- 3 நாட்கள் அதாவது மிகக்குறுகிய காலத்தில் Offer Letter- பல்கலைக்கழக அனுமதி பத்திரத்தை பெற்று விசா ஆலோசனையும் வழங்குகிறது.

உங்கள் தகைமையுடன் உடன் தொடர்பு கொள்ளுங்கள்....!

New Zealand, Malaysia, Singapore, Italy, France

போன்ற நாடுகளுக்கு துரித கதியில் விசிட் விசா மற்றும் உயர்கல்வியை தொடர Study Visaவை பெற இன்றே தொடர்புகொள்ளுங்கள்.
ஆங்கிலம் சாதாரணமாக பேசத்தெரிந்தால் போதுமனது. Payment After Visa

Family & Single Visit Visaவுக்கான ஆலோசனைகளும் வழங்கப்படும்.

3 வாரங்களில் விசாக்கள்

0771828215

American College of Applied Studies Pvt Ltd


## மரண அறிவித்தல்



தோற்றம் 19 . 07 . 1952

மறைவு 27 . 06 . 2025

### இரஞ்சினி பற்குணநாதன்

கச்சேரி நல்லூர் வீதியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இரஞ்சனி பற்குணநாதன் அவர்கள் கடந்த (27.06.2025) வெள்ளிக்கிழமை காலமானார்

அன்னார் காலஞ்சென்றவர்களான பஞ்சரத்தினம் - பவளரத்தினம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கனகசபை - சரஸ்வதி தம்பதியரின் அன்பு மருமகளும், ஓய்வு பெற்ற ஆசிரியர் கனகசபை பற்குணநாதன் அவர்களின் அன்பு மனைவியும், பகீரதி, மோகன்ராஜ், இளமதி, ஆகியோரின் அன்புத்தாயரும், கணேசரத்தினம், லதாநிதி, கஜன் ஆகியோரின் அன்பு மாமியாரும், கிருபாமூர்த்தி, மாலினி ஆகியோரின் அன்புச் சகோதரியும், பூலோகசிங்கம், பேரின்பநாதன், ஜெகநாதன், நாகசோதி, ஜெகசோதி, சிவசோதி, திருநாவுக்கரசு, புவனதேவி ஆகியோரின் அன்பு மைத்துனியும், தருணிகா, அஸ்னிகா ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.


அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (29.06.2025) ஞாயிற்றுக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 05.00 மணியளவில் அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

164/9, கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்: குடும்பத்தினர்
077 026 1706

*CS/58714) J-1

## மரண அறிவித்தல்



பிறப்பு 10 . 09 . 1965

இறப்பு 27 . 06 . 2025

### வைரவிப்பிள்ளை கமலதாசன்

மின்பொறியியலாளர்

( முன்னாள் உதவிப்பணிப்பாளர் - வவுனியா, இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை, முன்னாள் பகுதிநேர விரிவுரையாளர் தொழிநுட்பக்கல்லூரி - வவுனியா )

மட்டக்களப்பு வாவிக்கரை வீதியை பிறப்பிடமாகவும், வவுனியா வெளிக்குளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட வைரவிப்பிள்ளை கமலாதாசன் அவர்கள் நேற்று முன்தினம் (27.06.2025) வெள்ளிக்கிழமை காலமானார். அன்னார் காலஞ்சென்றவர்களான வைரவிப்பிள்ளை - புவனேஸ்வரி தம்பதியரின் புதல்வனும், காலஞ்சென்றவர்களான மகாலிங்கம் (ஓய்வுபெற்ற நில அளவையாளர்) - இராஜசோதி தம்பதியரின் மருமகனும், நந்தினி (பட்டயப் பொறியியலாளர்) அவர்களது பாசமிகு கணவரும், ரஞ்சனி (கட்டடக் கலைஞர்) அவர்களின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற உமாகந்தன், திருமதி உமாமகேஸ்வரி அருள்நாயகம், மனோகரி, காலஞ்சென்ற உதயகுமார் அவர்களின் சகோதரரும், சின்னத்தம்பி அருள்நாயகம், ரதிவானி உதயகுமார், காலஞ்சென்ற குமுதினி சந்திரகாந்தன் (ஓய்வுநிலை அதிபர், விவசாயக்கல்லூரி வவுனியா), மாதினி (தொழிநுட்ப உத்தியோகத்தர், ஏறாவூர் நகரசபை), ராஜ்குமார் (ஆசிரியர், மட்டக்களப்பு), சிவகுமார் (தொழிநுட்ப உத்தியோகத்தர், பருத்தித்துறை பிரதேச சபை), சந்திரகாந்தன் (முன்னாள் நிறைவேற்றுப் பொறியியலாளர் - வவுனியா), காலஞ்சென்ற அன்ரன் (முன்னாள் தொழிநுட்ப உத்தியோகத்தர், ஏறாவூர் நகரசபை), ரஞ்சினி (ஆசிரியை, வந்தாரமுல்லை), காலஞ்சென்ற சுஜந்தினி ஆகியோரின் அன்பு மைத்துனரும், யசோதர் (software architect), ஹரிதரன், (save the children, Batticaloa), அகல்யா சுரேஸ் (Deakin university Australia), ஹரிசயன், ஹரினிகா ஆகியோரின் மாமனாரும், பவந்தினி (கனடா), அனந்தசயன் (கனடா), திவானா ஆகியோரின் பெரியப்பாவுமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (30.06.2025) திங்கட்கிழமை காலை 08.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 10.00 மணியளவில் தகனக்கிரியைக்காக, வெளிக்குளம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

679/20 I, ஹொறவப்பொத்தானை வீதி,
வெளிக்குளம்,
வவுனியா.

தகவல்:
குடும்பத்தினர்
077 331 6743

(CS 58712) E

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாடகைக்கு

வெள்ளவத்தையில் தளபாடங்களுடன் சகல வசதிகளுடன் ஒரு அறை, இரண்டு அறை கொண்ட Apartment வீடுகள் (நாள், கிழமை, மாத) வாடகைக்கு. Car Parking உண்டு.

**Raj Tower**
**145 /1, Galle Road**
**Colombo -06.**
**TP: 0112055308, 011 2055655**
**0777 388860**

(CS/45182) I-1

## வேலையாள் தேவை

**கிளிநொச்சி நகரில் இயங்கும் ஹாட்வெயார் நிறுவனத்திற்கு கணினி தரவுநிரற்படுத்துனர் தேவை.** (Primary Entry, GRN)

**[இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்]**

CV Whatsapp செய்யவும்

Whatsapp No - **077 717 0624 , 021 228 3663**

(CS/3458) (C) D*


## வேலையாள் தேவை

**கிளிநொச்சி நகரில் இயங்கும் ஹாட்வெயார் நிறுவனத்திற்கு டீசல் இயந்திரங்கள் மற்றும் இலத்திரனியல் கருவிகள் (Power Tools) திருத்தக்கூடிய அனுபவம் வாய்ந்தவர்கள் தேவை.**

CV Whatsapp செய்யவும்

Whatsapp No - **077 923 4668 , 021 228 3663**

(CS/3459) (B) D*




UNIVERSITY COLLEGE OF JAFFNA

UoVT

## UNIVERSITY COLLEGE OF JAFFNA

### University of Vocational Technology

Ministry of Education,Higher Education & Vocational Education

Applications are open for the following Diploma / Higher National Diploma

1. Building Services Technology
2. Construction Technology
3. Cosmetology
4. Farm Machinery Technology
5. Food Technology
6. Hospitality Management
7. Information and Communication Technology
8. Mechatronics Technology
9. Production Technology

**Closing Date 21st July 2025**

Bursary for eligible Students

*Entry Qualifications: GCE A/L Qualified or NVQ 4*

Accreditation QMS TVEC Approved Registration

**Career Path:** A/L or NVQ 4 → University College: NVQ 5 / Diploma → NVQ 6 / HND → NVQ 7 / Degree

**For more details please visit:**
* Website : www.ucj.ac.lk
* Telephone : 021-221-7791
* Fill the google form and attach the required documents
* Please pay the Application fee Rs.1000 to the Account No. (Peoples Bank 162-100100045947) and upload the scanned copy of the bank receipt with the online application

Accepting online applications only



# புன்னாலைக்கட்டுவன் ஆயாக்கடவை

# திருவருள்மிகு சித்திவிநாயகர் தேவஸ்தானம்

## ஏகாதச தின [பதினொரு திருநாள்]

## வருடாந்த மஹோற்சவ விஞ்ஞாபனம் - 2025

**ஐங்கரன் மெய்யடியார்களே!**

**நிகழும் மங்களகரமான விசுவாவசு வருடம் (30.06.2025) திங்கட்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் கொடியேற்றத்துடன் மஹோற்சவம் ஆரம்பமாகி பதினொரு தினங்கள் நடைபெற்று தொடர்ந்து பூங்காவனம், வைரவர் பொங்கலுடன் பூர்த்தியாக உள்ளது.**

| 30.06.2025 திங்கட்கிழமை முற்பகல் 10.30 மணி | 09.07.2025 புதன்கிழமை முற்பகல் 10.30 மணி | 10.07.2025 வியாழக்கிழமை முற்பகல் 10.30 மணி |
|---|---|---|
| **கொடியேற்றம்** | **தேர்த்திருவிழா** | **தீர்த்த உற்சவம்** |

சிவஸ்ரீ.தியாக கெங்காதரக் குருக்கள்
சிவஸ்ரீ.து.கு.ஜெகதீஸ்வரக்குருக்கள் ஆகியோரின் ஆசிகளுடன்

மஹோற்சவ குரு
சிவாகம கிரியா சாகரம் சிவஸ்ரீ தி. சோமநாதக் குருக்கள் (ஊரெழு)

**ஐங்கரன் அடியவர்கள் ஊர்மக்கள் அவ்வமயம் ஆயாக்கடவை ஐங்கரனை வழிபட்டு திருவருள் பெற்று மங்கலகரமாக மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வீராகுக.**

**“மண்ணுக தில்லை, வளர்கநம் பக்தர்கள் வஞ்சகர் போய்யகல”**

077 671 4191, 021 224 5051
Whats app - 076 245 1453
ஆயாக்கடவை ஸ்ரீ சித்தி விநாயகர் தேவஸ்தானம், புன்னாலைக்கட்டுவன்.

சுபம்
ஊர்மக்களும்
மஹோற்சவ உபயகாரரும்

பா.சுந்தரராஜசர்மா
ஆதீன கர்த்தா
ஆயாக்கடவை ஆதீனம்,
புன்னாலைக்கட்டுவன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாபிள் வேலை

உங்கள் வீடுகளுக்கு தரமான முறையில்
அழகாக மாபிள் பதித்துத் தரப்படும்.
ஒரு சதுர அடி - 75 ரூபா
நிலம் இழுத்துப் பதிக்க - 100 ரூபா

**077 334 1281**

## விற்பனைக்கு

புதிதாக இறக்குமதி செய்யப்பட்ட Toyota Yamaga Car விற்பனைக்குண்டு. 21,000Km. கலர்-Bronze. விலை 12.5 Milliyan பேசித் தீர்மானிக்கலாம் அதிகூடிய கேள்வி கருத்தில் கொள்ளப்படும்) வாங்கத் தீர்மானித்துள்ளவர்கள் மட்டும் தொடர்பு கொள்க.

தொடர்பு: **077 805 2520**

## பணிப்பெண் தேவை

கொழும்பு 6, வெள்ளவத்தை வீடொன்றில்
தங்கியிருந்து வேலை செய்ய பெண் ஒருவர்
தேவை. வயது - 55 வயதிற்குட்பட்டவர்.
சம்பளம் 35000/=

**077 822 4447**

## வேலையாட்கள் தேவை

தெகிவளையில் 15 பேர்ச் காணியில் மாதம் 120ஆயிரம் வாடகை தரும் 9 அறைகள் உள்ள வீடு விற்பனைக்கு உள்ளது.

1 பேர்ச் 49 இலட்சம்

தொடர்பு: **071 484 0610**

## வேலையாட்கள் தேவை

கொடிகாமத்தில் இயங்கும் அச்சகம் ஒன்றிற்கு தொழில் தெரிந்தவர்கள் ஆண், பெண் தேவை.
(வேலை பழக விரும்புபவர்களும் தொடர்பு கொள்ளவும்.)

(CR 453771 k)

தொடர்புகளுக்கு:
**076 931 8695**

## விற்பனைக்கு

சுன்னாகம் கதிரைமலை வீதி (முருகேசு பண்டிதர் வீதி) K.K.S வீதிக்கு அருகாமையில் 2 3/4 பரப்பு காணியுடன் நல்ல நிலையில் உள்ள 3 Room,1 Bathroom,வாகனத்தரிப்பிடத்துடன் சுற்றுமதில் கட்டிய gate போடப்பட்ட வீடு தரமான உறுதிப்பத்திரங்களுடன் விற்பனைக்கு உண்டு. விலை 3 கோடி. தரகர் தேவையில்லை. விலை பேசித்தீர்மானிக்கப்படும்.

(CS/45366)

**077 343 4005**

## கணி விற்பனைக்கு

யாழ் கொக்குவில் கிழக்கு பொற்பதி
கலட்டி முந்தல் லேனுக்கு
அருகாமையில் 1 பரப்பு 8குழி சதுர
காணி விற்பணைக்ககு.

தொடர்பு :- **077 365 8485**

## வெளிநாடு பயணம்

- UK
- CANADA
- AUSTRALIA
- DUBAI
- FINLAND
- GERMANY
- NEW ZEALAND
- FRANCE
- SPAIN
- MALTA

OUR SERVICES
- STUDENT VISA
- VISIT VISA
- BUSINESS VISA
- TOURIST VISA
- EMBASSY FORM FILLING
- JP ATTESTATION
- ADMISSION FOR OVERSEAS UNIVERSITIES

Fly with/without IELTS.
Scholarship up to 40%
PSW/Stay back options for all the countries.
Get a Schengen visa for Europe countries.
Career guidance from Universities.

GET MORE DETAILS +94 76 979 0622 +94 76 770 5394

HYBRID VISA CENTRE
No: 6 1/1, 37th Lane, Wellawatta, Colombo - 06
+94 112 362 925 hybridcampus@gmail.com
hybridcampus.lk

## வெற்றிடங்கள்

**புடவை உற்பத்தியில் முன்னோடியாகத் திகழும் எங்கள் நிறுவனத்தில் பின்வரும் வெற்றிடங்களுக்கு இன்றே விண்ணப்பிக்கவும்.**

**01. ஆள் சேர்ப்பு முகவர்**
ஆண்/பெண் தொழிலாளர்களை சேர்க்கும் முகவர் ஒருவர் தேவை. ஒவ்வொரு தொழிலாளரை சேர்ப்பதற்கும் முகவருக்கு ரூபாய் 3000.00 துடன் பஸ் கட்டணமும் வழங்கப்படும்.

**02. ஊழியர்கள் (Workers)**
பயிற்சிபெற்ற, பயிற்சி பெறாத ஆண், பெண் ஊழியர்கள் (Workers) தேவை. மாத சம்பளம் மற்றும் மேலதிக ஊதியம் (OT) உடன் சேர்த்து 60,000.00 முதல் 70,000.00 வரை பெறலாம்.

**03. ஜூகி இயந்திரம் இயக்குபவர்கள்/ உதவியாளர்கள்**
(Juki Machine Operators/ Helpers )

**04. இயந்திரம் இயக்குபவர்கள் / உதவியாளர்கள்**
(Machine Operators/ Helpers )

**05.பாதுகாவலர்கள் (Watcher)**
45-50 வயதிற்குபட்ட பாதுகாவலர்கள் (Watcher) தேவை. சம்பளம் ஒரு நாளைக்கு 1500 முதல் 2000 வரை வழங்கப்படும்.

**06. Electrician**
2 வருடத்திற்கு மேல் அனுபவம் இருக்க வேண்டும். நாள் சம்பளம் 2500 மேல் பெறலாம்.

**07. Office Clerk**
A/L சித்திபெற்ற கணனி அறிவுடையவர்கள் தேவை

**08. கட்டிட பராமரிப்பு மேற்பார்வையாளர்**
(Building Maintenance Supervisor)

இலவச தங்குமிடம் மற்றும் சகாய விலையில் மூன்று நேரமும் உணவு பெற்றுக்கொள்ளும் வசதி உண்டு. மேலதிக விபரங்களுக்கு கீழ்கண்ட எண்ணிற்குத் தொடர்புகொள்ளவும்.

(CS 58706) E

CLIFTEX INDUSTRIES (PVT) LTD
இல. 18 வெலியமுன வீதி, ஹேகித்த, வத்தளை.
தொலைபேசி: 077-2217989 / 076-6200300
hr@cliftextiles.com


## மரண அறிவித்தல்



**செல்லையா கந்தையா**

தோற்றம்
22.09.1940

மறைவு
23.06.2025

யாழ் வேவில் வல்வெட்டியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா கந்தையா அவர்கள் 23.06.2025 திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா - வள்ளியம்மை தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற வர்களான குமாரசாமி - மனோன்மணி தம்பதிகளின் ஆசை மருமகனும், சவுந்தரிப்பிள்ளை அவர்களின் பாசமிகு கணவரும், ஜெயசீலன், ஜெயரூபி, ஜெயந்தி, ஜெயசுதா ஆகியோரின் பாசமிகு தந்தையும், ரதிகலா, நகுலேஸ்வரன், குமரதீசன், சிவசுதன் ஆகியோரின் அன்பு மாமனாரும், சியானி, ரதுசன், தாட்சாயினி, நவீனன், ஜெவீனன், விஸ்வதன், சஞ்சீவன், கனிஷ்டியன், ஜெதீசன், ரதீசா, லஷ்சி, சிந்துசன், சோபிதா, ஹர்சிதா ஆகியோரின் ஆசை பேரனும், காலஞ்சென்றவர்களான பருவதம், சிவசுப்பிரமணியம் ஆகியோரின் பாசமிகு சகோதரரும், காலஞ்சென்றவர்களான துரைசிங்கம், சிவபாலு மற்றும் ராணிமலர் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (30.06.2025) திங்கட்கிழமை காலை 09.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று. முற்பகல் 10.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக ஊறணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

சீலன் - 0041 772 410 043
ஜெயந்தி - 0049 176 418 87076
[illegible] - 0049 176 767 82985
[illegible] - 076 155 1851

(CR/45378) J-1

**தகவல்**
**குடும்பத்தினர்**

## மரண அறிவித்தல்

தோற்றம்
14
09
1934



மறைவு
26
06
2025

**திருமதி திலகேஸ்வரி அருளம்பலம்**

அரியாலை, நாவலர் வீதியை பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட திலகேஸ்வரி அருளம்பலம் அவர்கள் வியாழக்கிழமை 26.06.2025 அன்று இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சதாசிவம் - பாக்கியம் தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான செல்லையா - பாக்கியம் தம்பதியினரின் மருமகளும், காலஞ்சென்ற அருளம்பலம் (கணக்காளர், யாழ். ஐக்கிய வியாபாரச் சங்கம்) அவர்களின் அன்பு மனைவியும், ஜெயந்திரன் (நோர்வே), ஜெயச்சந்திரன் (லண்டன்), ஜெயபாலன் (Regional Manager, Commercial Bank-Northern Region), ஜெயராணி நேருஜி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்றவர்களான Dr. ராஜேஸ்வரி - ராஜகாரியர், புவனேஸ்வரி - துரைராஜா, மகேஸ்வரி பரமநாதன், சபாநடேசன், பரமேஸ்வரி ஆறுமுகம், Dr. சதானந்தன், பாக்கியநாதன், சரோஜினி துரைசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், சந்திரமாலா, சுஜாத்தா, தர்மினி (பொறியியலாளர் வீதி அபிவிருத்தி அதிகாரசபை வடமாகாணம்), நேருஜி ஆகியோரின் அன்பு மாமியாரும், இந்துஜா ஜெயவர்மன், லாவண்யா சங்கீர்த்தன், பிரணவன், கஜாநனன், அனந்தயன், அர்ச்சினி, நிலானி, பிரீதினி ஆகியோரின் பாசமிகு பேத்தியாரும், இமையா, இசையா, தூரிகா ஆகியோரின் அன்பு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 29.06.2025 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 03.00 மணியளவில், 206 அரசடி வீதி, கந்தர்மடத்தில் அமைந்துள்ள அன்னாரின் தற்காலிக இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரிகைக்காக அரியாலை சித்துப்பாத்தி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**206, அரசடி வீதி**
**கந்தர்மடம்**
**யாழ்ப்பாணம்**
(Northern uni க்கு அருகாமையில்) (CS 58718) E

**தகவல்:**
**குடும்பத்தினர்:**
**ஜெயபாலன் - 077 728 5361**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கங்கள்: 08

# சஞ்சீவி

Registered as a Newspaper

நல்லார் ஒருவர்க்குச் செய்த உபகாரம்
கல்மேல் எழுத்துப்போல் காணுமே — அல்லாத
ஈரமிலா நெஞ்சத்தார்க் கீந்த உபகாரம்
நீர் மேல் எழுத்துக்கு நேர்

— ஔவை

மலை : 34 வள்ளுவர் ஆண்டு : 2056 ஆனி 15 ஞாயிற்றுக்கிழமை (298.06.2025) சிகரம் :15

# செம்மணி:

## முடிவுறாப் புதைகுழிகளின் கதை

○ ஜெரா



2

முதன்முதலில் பாடசாலை மாணவி கிருஷாந்தி படுகொலையுடன் ஆரம்பமான செம்மணி மனிதப்புதைகுழி வெளிக்கொணர்வுகள் இலங்கைத்தீவில் தமிழர்கள் எப்படியெல்லாம் இனவழிப்புச் செய்யப்பட்டிருக்கிறார்கள் என்பதைப் பதிவு செய்யவேண்டியுள்ளது. அதற்கான ஒரு பதிவாக இந்தப் பெருங்கட்டுரைத் தொகுப்பு அமையும்.

**1996** 1996 ஆம் ஆண்டு கிருஷாந்தியின் படுகொலை யாழ்ப்பாணத்தில் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியது. இலங்கை நாடாளுமன்றத்திலும், சர்வதேச அரங்குகளிலும் முக்கி யமான பேசுபொருளாக இந்தவிடயம் எடுத்துக்கொள்ளப்பட்டது. தம்மீது விழுந்த குற்றச்சாட்டைப் போக்குவதற்கு உடனடி விசாரணையை இராணுவத்தரப்பு ஆரம்பித்திருந்தது. அதன் விளைவாக ஏழு இராணுவத்தினரும், இரண்டு பொலிஸாரும் கைதுசெய்யப்பட்டனர். அவ்வாறு கைது செய்யப்பட்டவர்களில் ஒருவர் அளித்த வாக்குமூலமே கீழே பதிவிடப்படுகின்றது.

## வாக்குமூலம்

1996ஆம் ஆண்டு அரியாலை துண்டிப் பகுதியில் அமைந்திருந்த இராணுவ முகாமில் சிவில் நிர்வாகப் பகுதியில் கட்டளை அதிகாரியான கப்டன் லலித் ஹோவுக்குக் கீழ் பணிபுரிந்தேன். அரியாலை, துண்டிப் பகுதியில் வீடுகளில் உள்ளவர்களின் விவரங்கள் மற்றும் அந்தப் பகுதியில் உள்ள இளைஞர்களின் விவரங்கள் ஆகியவற்றைப் பதிவு செய்யும் பொறுப்பு என்னிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. இந்தப் பணியை மேற்கொண்டிருந்த சமயம் புலனாய்வுப் பிரிவு வேலையும் என்னிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது.

புலனாய்வுப் பிரிவு வேலைகளுக்கு கப்டன் லலித், கப்டன் ஸ்ரீ ஜெயவர்த்தன ஆகியோர் உட்பட சில வீரர்கள் இந்தப் பிரிவில் இருந்தனர். அவர்களின் கீழ் நான் செயற்பட்டேன். இந்தச் சந்தர்ப்பத்தில் அரியாலைப் பகுதியில் சுற்றிவளைப்பு ஒன்றை இராணுவத்தினர் நடத்தினர். அந்தப் பகுதியில் உள்ள வீடுகளில் இருந்த சகலரையும் வெளியே அழைத்து வந்து நெடுங்குளம் எனும் இடத்தில் ஒன்று சேர்த்து விசாரித்தோம்.

அந்தச் சந்தர்ப்பத்தில் இங்கு மேஜர் வீரக்கொடி, மேஜர் குணசேகர ஆகியோர் பிரசன்னமாகியிருந்தனர். அவர்கள் முகமூடி அணிந்த இருவரை அழைத்து வந்து அங்கு நின்ற பொதுமக்கள் முன்நிறுத்தினர். அந்த இரு முகமூடி நபர்களும் விடுதலைப்புலிகளின் உறுப்பினர்கள் எனத் தெரிவித்து ஐம்பது பேரை அடையாளங் காட்டினார்கள். அங்கு ஐம்பது பேரும் வீடியோப் படம் எடுக்கப்பட்டதுடன் எம்மிடமிருந்த பெயர்ப்பட்டியலுடன் அவர்களின் பெயர் விபரங்கள் ஒப்பிட்டும் பார்க்கப்பட்டன. பின்னர் அவர்களின் வீட்டு முகவரிகள் பெறப்பட்டு அவர்கள் விடுவிக்கப்பட்டார்கள்.

விடுதலைப் புலிச் சந்தேகநபர்களைக் கண்டுபிடிக்க அந்த முகவரியின்படி முயற்சிகள் எடுக்கப்பட்டன. அரியாலைப் பகுதியில் மக்கள் எவ்வாறு கைதுசெய்யப்பட்டார்கள்? எவ்வாறு கொல்லப்பட்டார்கள்? எங்கு புதைக்கப்பட்டார்கள்? என்ற விவரங்களை என்னால் நிச்சயமாகக் கூறமுடியும்.

அரியாலைப் பகுதியில் முதலில் கைதானவர்கள் தபால்கட்டைச் சந்தியில் 7 ஆவது காலாட் படையணிப் பிரிவில் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர். கப்டன் ஸ்ரீ ஜெயவர்த்தன தலைமையில் இயங்கிய "சி" பிரிவிலும், அரியாலையில் உள்ள கட்டடத்திலும் பலர் தடுத்துவைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டுவந்தனர். மற்றொரு தடுப்பு முகாம் தபால்கட்டைச் சந்தியில் இருந்து செல்லும் பாதையில் பாடசாலைக்கு அருகில் உள்ள விடுதலைப் புலிகள் அமைத்த முன்னைய அலுவலகத்தில் இயங்கியது. கல்வித் திணைக்களத்தில் கடமையாற்றும் செல்வரத்தினம், என்பவரைக் கைது செய்து "சி" பிரிவு முகாமில் தடுத்து வைத்திருந்தனர். அவரைக் கப்டன் லலித், கப்டன் ஸ்ரீ ஜெயவர்த்தன, லெப்டினன்ட் துடுகல்ல ஆகிய மூவரும் சேர்ந்து கைதுசெய்தனர். அவரை விடுவிக்குமாறு அவரது மனைவி, பிள்ளைகள், என்னிடம் கேட்டனர். இதனையடுத்து அந்த முகாமுக்கு சென்ற சமயம் செல்வரத்தினம் என்னைக் கண்டதும் தான் விடுதலைப்புலிகளுடன் தொடர்பற்றவர் எனத் தெரிவித்து தன்னை விடுவிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று மன்றாட்டமாகக் கேட்டார்.

விடுதலைப் புலிகளுடன் தொடர்பு இல்லாதவர் என்பதால் அவரை விடுவிக்குமாறு கப்டன் லலித், கப்டன் ஸ்ரீ ஜெயவர்த்தன ஆகியோரிடம் கோரினேன். அவரை விடுவிப்பதாக அவர்கள் தெரிவித்தனர். ஆனால் அன்று இரவே அவரைக் கொலை செய்து விட்டார்கள். மறுநாள் நான் போனபோது அங்கு 10 சடலங்கள் கிடந்தன.

(தொடரும்)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரபரப்புப் பசியில் தவறவிடப்படும் இலக்குகள்

பஸீர் காக்கா

கடிவாளத்தைக் கைவிட்டு சுமந்திரன் குதிரை ஓடுவதை கட்டுப்படுத்த முயற்சிக்காவிட்டால் தமிழ்த் தேசியத்துக்காக கடந்த காலத்தில் சி.வி.கே ஆற்றிய பங்களிப்பின் பெறுமதி அடியோடு அழிந்துவிடும்.

சிங்களம் எதனை எதிர்பார்க்கிறதோ அதனை நிறைவேற்றத்தெரிந்தோதெரியாமலோ எமது மக்கள் கூட்டத்தினில் சிலர் துணைபோவது வருத்தமளிக்கும் விடயமாக உள்ளது. காணாமற்போனோரின் உறவுகள் சர்வதேசநீதி கேட்கும் சந்தர்ப்பத்துக்காக வலியோடு இத்தனை வருடம் காத்திருந்தனர். மக்கள் செயல் எனும் இளையோர் அமைப்பினர் "அணையா விளக்கு" எனும் பெயரில் தொடர்ச்சியாக மூன்று நாள்கள் போராட்டத்தைக் கனிய வைத்து ஐ.நா. பிரதிநிதியிடம் ஏழு அம்சங்கள் உள்ள கோரிக்கையைக் கையளிக்கத் திட்டமிட்டனர்.



ஆனால் மலிவான அரசியலை முன்னெடுக்க முனையும் சில அரசியல்வாதிகளும், யார் எக்கேடு கெட்டாலென்ன பரபரப்பை உருவாக்க, 'லைக்'குகளை அள்ளிப் பணம் பண்ணுவதையே இலக்காகக் கொண்ட சில யூரிப்பர்களும் தலைகீழாக நின்றதைக் காணும் போது இரத்தக்கண்ணீர் வடிக்கும் நிலை ஏற்பட்டது.

தமிழரசுக்கட்சியின் பதில் தலைவராகக் காட்சியளிக்கும் சி.வி.கே சிவஞானம் தொடர்ச்சியாக மூன்றாவது நாளாக செம்மணி போராட்டக் களத்துக்கு வந்தார். அவ்வளவுதான் ! கிளிநொச்சியில் இருந்து அன்று தான் வந்த மோசமான வியாபாரி ஒருவர் நிகழ்ச்சி நிரலைத் தலைகீழாக மாற்றியமைக்க முற்பட்டார். ஊடகநெறியை முழுமையாகக் கற்காததன் விளைவோ, தமிழரின் போராட்ட வரலாற்றை, அதன் வலியை அனுபவபூர்வமாக உணராததன் தன்மையோ இந்த மோசமான வியாபாரி செய்த அட்டகாசத்தினை யூரிப்பர்கள் பரபரப்பாக்க முனைந்தனர். தொடர்ந்து கடற்தொழில் அமைச்சர் சந்தரசேகரன் வருகை தந்தபோதும் சிலர் குழப்பம் விளைவிக்க முயன்றனர். பரபரப்புத்தேடும் பலருக்கு இந்நிகழ்வும் உதவியது.

என்ன செய்வது? சொல்லுவது சரியோ பிழையோ யூரியூப்பில் பிரபலமாகிவிட்டால் எம்.பி. ஆகிவிடலாம்; அரசியலில் நிலைக்கலாம் எனக் கணிசமானோர் எண்ணும் நிலை தோன்றிவிட்டது. இதற்கு சுமந்திரன் மீதான கடுப்பும், தமிழ்த் தேசியம் என்று பேசிக்கொண்டு தமிழ்ப் பொதுவேட்பாளருக்கு எதிரான கடுமையான நிலைப்பாட்டை எடுத்த அகில இலங்கை தமிழ்க்காங்கிரசும், தமிழர் தாயகத்தில் ஆயிரம் விகாரைகளை அமைக்கத் திட்டமிடும் கட்சியில் போட்டியிட்ட சந்திரகுமார் போன்றோர் மீதான எரிச்சலுமே காரணம்.



செம்மணியில் கடந்த புதன் கிழமை (25.06.2025) நடந்த நிகழ்வுகள்தான் இலக்குகளை திசைதிருப்பும் விடயம் அல்ல. ஏற்கனவே தியாகி திலீபனின் நினைவுநாளை தமது அரசியல் எதிரிகளை சாடும் களமாக சட்டத்தரணி சுகாஸ் மாற்றியமைக்க முற்பட்டதும் பிழையான முன்னுதாரணமாகி விட்டது. சுகாசை நியாயப்படுத்த அக்கட்சியினர் முனைந்தது தெரிந்து கொண்டே விட்ட தவறு. இது போன்ற நிகழ்வுகள்தான் டாக்டர் அர்ச்சுனா போன்ற பரபரப்பு அரசியல்வாதிகள் உருவாகக் காரணம்.

'அணையாவிளக்கு' நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் மிகவும் கடுமையாக உழைத்தனர். ஐ.நா. விடம் விடுக்கப்படும் வேண்டுகோள் முதலானவற்றை சரியான முறையில் வடிவமைத்தனர். எனினும் இரண்டாம் நாள் நிகழ்வில் வேலன் சுவாமி ஆற்றியஉரை நிகழ்வின் நோக்கத்தை திசைதிருப்ப பிள்ளையார் சுழி போட்டுவிட்டது. அதைச் சாட்டாக வைத்து எல்லாக் கோளாறுகளும் உருவாகிவிட்டன. யாழ். இந்துக் கல்லூரியில் இடம் பெற்ற புலிகளின் குரல் ஆண்டுவிழா நிகழ்வின்போது இலக்குத் தவறிய கருத்து ஒன்றை வில்லிசைக் கலைஞர் ஒருவர் குறிப்பிட்ட போது பொறுப்பாளர் பரதன் எவ்வாறு செயற்பட்டார் என்பதை எமது மக்கள் நன்றாக அறிவர். இவ்வாறான வரலாறுகளை இன்று வாழ்ந்து கொண்டிருக்கும் மூத்த ஊடகவியலாளர்கள் இளையதலைமுறையினரான இன்றையயூரியூப்காரர்களுக்கு எடுத்துக்காட்ட வேண்டியது காலத்தின் கட்டாயம்.

கிளிநொச்சியில் இருந்து இந்நிகழ்வில் பங்கேற்க 14 பேருந்துகளில் வந்த மக்களின் உணர்வுகளையும் கதவடைப்புச்செய்த வணிக மக்களின் பங்களிப்பையும் ஒரேஒரு வணிகர் பயனற்றதாக்க முனைந்தார். எதிர்காலத்தில் இவ்வாறான நிகழ்வுகளை ஏற்பாடு செய்வோர் உரையாற்றும் பிரமுகர்களிடம் நிகழ்வின் நோக்கத்தைத் திசைதிருப்பும் வகையில் கருத்துத் தெரிவிக்கவோ செயற்படவோ வேண்டாம் எனத் தெளிவாக எடுத்துரைக்க வேண்டும்.

இதேவேளை அரசியற் கட்சியினர் வடக்கு, கிழக்கு எமது தாயகம் என்ற வகையில் கிழக்கு மக்களின் உணர்வுகளைப் புரிந்து கொள்ள முயற்சிக்க வேண்டும். வடக்கில் இருந்து உத்தரவிட்டால் கிழக்கில் நடைமுறைப்படுத்தியே ஆக வேண்டும் என்று திமிராக நடப்பதை விட்டு அந்த மக்களின் உணர்வுகளை விளங்கிக்கொள்ள முயற்சிக்க வேண்டும். உத்தரவுக்கு அந்த மண்ணில் வரவேற்பு கிடைக்காவிட்டால் தாறுமாறாக முடிவெடுக்க தயங்க மாட்டேன் என்று திமிராகச் செயற்படும் சுமந்திரனின் செயற்பாட்டிற்கு கடிவாளம் போடமுனையாததே சி.வி.கே மீது வடக்கு ,கிழக்கு மக்கள் சீற்றமடையக் காரணம் என்ற உண்மையை அவர் புரிந்துகொள்ள முயற்சிக்க வேண்டும். கல்முனை தமிழ் பிரதேச செயலக விவகாரத்தில் சுமந்திரன் ஆடிய திருக்கூத்துகளால்தான் அடுத்து இடம் பெற்ற தேர்தலில் தமிழ் பிரதிநிதித்துவத்தை இழக்க நேர்ந்தது.

சுமந்திரன் இன அழிப்புக்கு போதுமான சாட்சியங்கள் இல்லை, ஆதாரங்கள் இல்லை என அடம்பிடிப்பவர். இன அழிப்பு இடம்பெற்றது என வடக்கு மாகாண சபையில் ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டதைத் தொடர்ந்து தமது சிங்கள எசமானர்களைத் திருப்திப்படுத்த அவர் ஆடிய ஆட்டங்களை முதுமைகாரணமாக சி.வி.கே மறந்துவிட்டார் போல் இருக்கிறது. அதனால்தான் மிகத் திமிருடன் மோசமான முடிவுகளை சுமந்திரன் எடுக்கின்ற போது மௌனமாக சி.வி.கே அங்கீகரிக்கிறார் போல இருக்கிறது.

உதாரணத்துக்கு காரைதீவு பிரதேசசபையை சுட்டிக் காட்டலாம். முன்னாள் தலைவர் ஜெயசிறிலை ஏற்க முஸ்லீம் காங்கிரசினர் மறுக்கின்றனர் என்று சொல்வது ஏற்புடையது அல்ல. எங்களுடைய வீட்டுக்கு எமது உறவினர் வரவேண்டும் எனில் நாம் தான் முடிவெடுக்க வேண்டும். எங்கள் வீட்டு நாய்க்கு உங்களது மணம் பிடிக்கவில்லை எனவே வீட்டுக்கு வராதீர்கள் என்று சொல்ல முடியாது. நாயை வீட்டுக்கு பின்புறமாகவே கட்டிவைப்பதே முறை. கடிவாளத்தைக் கைவிட்டு சுமந்திரன் குதிரை ஓடுவதை கட்டுப்படுத்த முயற்சிக்காவிட்டால் தமிழ்த் தேசியத்துக்காக கடந்த காலத்தில் சி.வி.கே ஆற்றிய பங்களிப்பின் பெறுமதி அடியோடு அழிந்துவிடும்.

இனப்படுகொலைக்குத் துணை போன சிறிதர் தியேட்டரில் கால் வைத்ததை சி.வி.கே எந்த விதத்திலும் நியாயப்படுத்திவிட முடியாது. குறிப்பாக, பொதுவேட்பாளர் விடயத்தில் ஆதரவு வழங்கியோரை பழிவாங்கும் வெறியுடன் திமிராகச் செயற்படுவதை நிறுத்த வேண்டும். தவறுகளில் இருந்து பாடம் கற்கத் தவறுவோமாக இருந்தால் எதிர்காலச் சந்ததி சாபமிடும் நிலை ஏற்படலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# செம்மணிக்கு வந்த ஐ.நா.

நிலாந்தன்

2015க்குப் பின் நடந்த ஒரு முள்ளிவாய்க்கால் நினைவுநாளில் சம்பந்தர் முள்ளிவாய்க்காலுக்கு வருகைதந்திருந்தார். அங்கு அவரை நோக்கிக் கேள்விகள் கேட்கப்பட்டன. நிலைமை கொந்தளிப்பாக மாறியது. அப்பொழுது ஒரு பெண் உணர்ச்சிவசப்பட்டவராக சம்பந்தரை நோக்கி உரத்த குரலில் ஆவேசமாகக் கேள்விகளைக் கேட்டார். அவர் அப்பொழுது கறுப்பும் சிவப்புமான நிறச்சேலையை உடுத்திருந்தார்.

இது நடந்து சில ஆண்டுகளின் பின் யாழ்ப்பாணம் முற்றவெளியில் வான்படைக் கண்காட்சி ஒன்று இடம்பெற்றது. இதில் வான்படை உலங்கு வானூர்திகளில் மக்கள் பயணம் செய்வதற்கு அனுமதிக்கப்பட்டார்கள். அங்கே சம்பந்தரை கேள்வி கேட்ட அதே பெண் தனது வளர்ந்த மகனோடு அந்த உலங்கு வானூர்தியில் அமர்ந்திருந்து. படமெடுத்து அதை முகநூலில் பகிர்ந்திருந்தார்.

தமிழ் மக்களின் தலையில் குண்டுகளைப் போட்ட அரச படையின் உலங்கு வானூர்தி ஒன்றில் பிள்ளையோடு அமர்ந்திருந்து அந்தப் படத்தைப் போடுகிறார். ஆனால் சில ஆண்டுகளுக்கு முன் முள்ளிவாய்க்காலுக்கு அஞ்சலி செலுத்த வந்த சம்பந்தரைப் பார்த்து ஆவேசமாகக் கொதித்து எழுந்தார். இதில் எது சரி? சம்பந்தரை நோக்கிக் கொதித்தது சரியா? அல்லது உலங்கு வானூர்தியில் அமர்ந்திருந்து படம் எடுத்தது சரியா? அல்லது இரண்டுமே பிழையா?

அப்படித்தான் கடந்த புதன்கிழமை செம்மணிப் போராட்டக் களத்தில் இருந்து சில அரசியல்வாதிகள் அவமதிக்கப்பட்டவை உணர்ச்சிக் கொதிப்பினால் ஏற்பட்ட விளைவுகள்தான். தமிழரசுக்கட்சிக்குள் உள்ள சுமந்திரன் அணிக்கு எதிராகக் கட்சிக்கு உள்ளேயும் கட்சிக்கு வெளியேயும் கடுமையான அதிருப்தி உண்டு. இதுபோன்ற உணர்வுபூர்வமான சந்தர்ப்பங்களில் அது வெடித்துக்கிளம்பும்.

ஆனால் அந்த எதிர்ப்பை, கொதிப்பைக் காட்டியிருக்கவேண்டிய களம் செம்மணி அல்ல. குறிப்பாகத் தமிழரசுக்கட்சியை சேர்ந்தவர்கள் அதைக் காட்டியிருக்கவேண்டிய களம் மார்ட்டின் வீதியில் உள்ள கட்சியின் தலைமையகமே. இது கடந்த ஆண்டிலேயே சம்பந்தப்பட்டவர்களுக்குச் சுட்டிக்காட்டப்பட்டது. சுமந்திரன் தந்திரமான வழிகளில் கட்சிக்குள் தன் பிடியைப் பலப்படுத்தி வருகிறார் என்று கொந்தளிப்பவர்கள் மார்ட்டின் வீதியில் உள்ள கட்சி அலுவலகத்தை முற்றுகையிடலாம். அங்கே தங்களுடைய எதிர்ப்பைக் காட்டுவதற்கு அவர்களுக்கு முழு உரிமையும் உண்டு.

ஆனால் தன்னார்வமாக ஒரு செயற்பாட்டு இயக்கம் கட்சி கடந்து முன்னெடுத்த ஒரு நடவடிக்கைக் களம் அதற்குரியதல்ல. அதைக் கட்சிகள் ஒழுங்கமைக்கவில்லை. எனவே அதைக் குழப்புவதற்கும் அவர்களுக்கு உரிமை இல்லை. அப்படிப்பட்ட இடங்களில் சிவஞானத்தை அல்லது சாணக்கியனை அல்லது சந்திரசேகரனை மறித்துவைத்து கேள்விகளைக் கேட்பது வேறு. அவர்களை அவமதிப்பது என்பது வேறு.

இது இப்படியே போனால் இனி எதிர்காலத்தில் தமிழ் மக்கள் மத்தியில் எந்த ஒரு செயற்பாட்டு அமைப்பும் கட்சி கடந்த அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடுவது கடினமாகிவிடும். ஒரு செயற்பாட்டு அமைப்பு அல்லது மக்கள் அமைப்பு எதையாவது செய்யப் புறப்பட்டால் நாட்டுக்கு உள்ளேயும் வெளியேயும் இருந்து எத்தனை பேர் அதனை 'ஹைஜாக்' பண்ண முயற்சிக்கிறார்கள்?

அணையாவிளக்குப் போராட்டக் களம் என்பது உள்ளூர் விடயம் ஒன்றுக்காக அனைத்துலக சமூகத்தின் கவனத்தை ஈர்க்கும் நோக்கத்தோடு திறக்கப்பட்டது. எனவே அதற்கு ஓர் அனைத்துலக பரிமாணம் உண்டு. கட்சி சாராத அதுபோன்ற நடவடிக்கைகள் தமிழ்த் தேசியப் பரப்பில் மிகக் குறைவு. ஆனால் அவற்றுக்குத்தான் புனிதம் அதிகம். அங்கேதான் கட்சி கடந்த தேசத் திரட்சி ஏற்படும். மெய்யான பொருளில் செயல்பூர்வமாக தமிழ் மக்களை ஒரு இனமாக, ஒரு தேசமாகத் திரட்டும் களங்கள் அவை. எனவே அந்த இடத்தில் உட்கட்சிப் பூசல்களுக்கும் கட்சிகளுக்கும் இடையிலான முரண்பாடுகளுக்கும் இடமில்லை.

கட்சி அரசியலை முன்னெடுப்பவர்கள் அந்தக் களங்களை கட்சி அரசியல் நோக்கத்தோடுதான் அணுகுவார்கள்; கையாளுவார்கள். அதில் சந்தேகமில்லை. இது தேசிய மக்கள் சக்திக்கும் பொருந்தும். ஆனால் அனைத்துலக சமூகத்திடம் நீதி கேட்கும் ஒரு போராட்டக் களத்தில் எல்லாத் தரப்புகளையும் ஒன்று திரட்டுவது அந்தப் போராட்டத்தின் நீதியைப் பலப்படுத்தும். கோழியைத் திருடினவனும் கோழியை வளர்த்தவனும் ஒன்றாகப் போராடமுடியாது என்று ஒரு விளக்கம் கூறப்படலாம். இன அழிப்புக்கு மறைமுகமாக உடந்தையாக இருந்தவர்களும் இன அழிப்பை விசாரிப்பதற்கு அனைத்துலக பொறிமுறையை ஏற்றுக்கொள்ளாதவர்களும் இன அழிப்புக்கு எதிரான நீதியைக் கோரிப் போராடும் ஒரு களத்தில் வரக்கூடாது என்றில்லை. அவர்கள் அங்கே வருவது போராட்டத்தின் நியாயத்துக்கு வலுச்சேர்க்கும். அங்கே அவர்களை வரவழைத்ததே வெற்றிதான். அங்கே வந்தால்தான் அரசியல் செய்யலாம் என்று ஒரு தவிர்க்கமுடியாத நிர்ப்பந்தத்தைப் போராட்டம் ஏற்படுத்தியதே ஒரு வெற்றிதான்.

மேலும் இன அழிப்பில் நேரடியாகவோ மறைமுகமாகவோ பங்களித்தவர்கள் அல்லது தங்களுக்குரிய தார்மீகப் பொறுப்பை நிறைவேற்றாதவர்கள் என்று பார்த்தால் ஈழத்தமிழர்கள் இந்த பூமியில் உள்ள பெரும்பாலான அரசுகளையும் பெரு நிறுவனங்களையும் குற்றஞ்சாட்ட வேண்டியிருக்கும். தமிழ் மக்களை இன அழிப்புச் செய்தவர்கள் என்று பார்த்தால் பிரித்தானியப் பேரரசிலிருந்து தொடங்கி உலகில் உள்ள எல்லாப் பேரரசுகளின் கைகளிலும் தமிழ்மக்களின் ரத்தம் உண்டு. ஏன் ஐ.நா.வின் கைகளிலும்தான்.

எந்த ஐ.நா.விடம் தமிழ்மக்கள் நீதியைக் கேட்கின்றார்களோ, எந்த மேற்கு நாடுகளிடம் தமிழ் மக்கள் நீதியை எதிர்பார்க்கின்றார்களோ, இந்த மேற்கத்திய ராஜதந்திரக் கட்டமைப்பானது இறுதிக்கட்டப் போரில் தமிழ் மக்களைக் கைவிட்டது. ஒருவகையில் அக்கால கட்டத்தில் நடந்த இன அழிப்புக்கு அவர்களும் பொறுப்பு, ஐ.நா.வும் உட்பட.

செம்மணியில் போராட்டம் நடந்துகொண்டிருந்தபொழுதே காஸாவில் இன அழிப்பும் நடந்து கொண்டிருக்கிறது. 16 ஆண்டு களின் பின் மீண்டும் மேற்கு ஆசியாவில் ஒரு முள்ளிவாய்க் கால். 16 ஆண்டுகளுக்கு முன் முள்ளிவாய்க்காலில் எது நடந்ததோ அதுதான் இப்பொழுது காஸாவில் நடந்து கொண்டிருக்கிறது. சிறு சிறு வித்தியாசங்கள். 16 ஆண்டுகளுக்கு முன் முள்ளிவாய்க்காலில் நடந்தவற்றை கையாலாகாத சாட்சியாக ஐ.நா. பார்த்துக்கொண்டிருந்தது. இன்றைக்கு காஸாவிலும் அதே நிலைமைதான்.

எனவே தமிழ்மக்கள் நீதிமான்களிடம்தான் நீதியைக் கேட்க வேண்டும் என்று தீர்மானித்தால் இந்த குரூர உலகிலே யாரிடமும் நீதியை எதிர்பார்க்கமுடியாது. ஏனென்றால் அரசியலில் யாருமே சுத்தமான நீதிவான்கள் கிடையாது. அண்மையில், மேற்கு ஆசியாவில் யுத்தம் வெடித்தபோது தமிழ் முகநூல் உலாவிகள் பெரும்பாலும் ஈரானின் பக்கம்தான் நின்றார்கள். அதை ஈரானின் பக்கம் என்று கூறுவதைவிடவும் இஸ்ரேலுக்கு எதிராக என்று கூறுவதே தகும். அதாவது காஸாவில் இனவழிப்பைச் செய்யும் இஸ்ரேலுக்கு எதிரான கூட்டுணர்வு அது. அந்த இடத்தில் தமிழ்மக்கள் பெரும்பாலும் இன அழிப்புக்கு எதிராகத் திரண்டு காணப்பட்டார்கள்.

ஆனால் இறுதிக்கட்டப் போரில் ஈரான் யாருடன் நின்றது? ராஜபக்சக்களோடு தான். இஸ்ரேல் யாரோடு நின்றது? ராஜபக்சக்களோடுதான். ஏன் அதிகம் போவான்? 2009க்கு பின் பலஸ்தீன் அதிகாரசபையானது மஹிந்தவை ஒரு விருந்தாளியாக அழைத்து நாட்டின் அதி உயர் விருதை அவருக்கு வழங்கியது. அது மட்டுமல்ல அவருடைய பெயரால் ஒரு வீதியையும் திறந்து வைத்தது. இது நடந்தது 2014இல். தமிழ்மக்கள் யாரை இன அழிப்புச் செய்தவர் என்று குற்றஞ்சாட்டினார்களோ அவரை அழைத்து பலஸ்தீனர்கள் கௌரவித்தார்கள். அங்கே பலஸ்தீனர்கள் நீதியின் அடிப்படையிலோ அறம் சார்ந்தோ முடிவெடுக்கவில்லை.

பலஸ்தீனியர்கள் மட்டுமல்ல ஈரானியர்கள், இஸ்ரேலியர்கள் முதலாக இந்த பூமியில் உள்ள எல்லா அரசுடைய தரப்புகளும் இராணுவ, பொருளாதார, அரசியல் நலன்களின் அடிப்படையில் தான் முடிவுகளை எடுக்கும். அறநெறிகளின் அடிப்படையிலோ நீதி நியாயங்களில் அடிப்படையிலோ அல்ல.

எனவே தமிழ்மக்கள் உலக சமூகத்திடம் நீதியை எதிர்பார்க்கும் பொழுது, நாம் நீதியாகப் போராடுகிறோம், நீதிக்காகப் போராடுகிறோம். எனவே உலகம் எங்களுக்கு நீதியை வழங்கிவிடும் என்றெல்லாம் அப்பாவித்தனமாக நம்பத்தேவையில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பாக ஐ.நா.வை பொறுத்தவரை அது முதலாவதாக அரசுகளின் அரங்கம். இரண்டாவதாகத்தான் அரசற்ற தரப்புகளின் அரங்கம். அங்கே அரசுகளின் நீதி தான் உண்டு. அங்கு மட்டுமல்ல இந்த பூமியில் எங்கும் அரசுகளின் நீதிதான் உண்டு. தூய நீதி கிடையாது.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் இலங்கைக்கு வரப்போகிறார் என்ற தகவல் கிடைத்ததும் ஒரு தொகுதி தமிழ் சிவில் சமூகங்கள் இணைந்து அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தன. கடந்த மார்ச் மாதம் 22 ஆம் திகதி கூட்டாக ஒரு கடிதம் அனுப்பின. கடந்த 2021ஆம் ஆண்டிலிருந்து ஐ.நா. மனித உரிமைகள் அலுவலகத்தில் இயங்கிவருகின்ற ஸ்ரீலங்காவைப் பொறுப்புக்கூற வைப்பதற்கான ஓர் அலுவலகத்தைச் சேர்ந்தவர்கள் இலங்கைக்குள் வருவதற்கு தொடர்ச்சியாக இலங்கை அரசாங்கங்கள் விசா வழங்கவில்லை. அந்த அலுவலகமானது சான்றுகளையும் சாட்சிகளையும் சேகரிப்பதற்குரியது. இலங்கைக்குள் சான்றுகளையும் சாட்சிகளையும் சேகரிப்பதற்கு அந்த அலுவலகத்தைச் சேர்ந்தவர்கள் வருவதற்கு இன்றுவரை விசா வழங்கப்படவில்லை.


இதைச் சுட்டிக்காட்டி இப்படிப்பட்ட ஒரு நாட்டுக்கு ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் வருவது என்பது அந்த நாடு செய்வதை அங்கீகரிப்பதாகக் கருதப்படும் என்ற பொருள்பட சிவில் சமூகங்கள் கருத்துத் தெரிவித்தன. அந்தக்கடிதத்தைத் தொடர்ந்து ஐ.நா. அலுவலர்களுக்கும் சிவில் சமூகப் பிரதிநிதிகளுக்கும் இடையே ஒரு மெய்நிகர் சந்திப்பு ஒழுங்கு செய்யப்பட்டது. புதிய இலங்கை அரசாங்கத்தை ஐ.நா.வால் கையாளத்தக்க தூரத்துக்குள் வைத்திருப்பதென்றால் இந்த அரசாங்கத்தோடு "என்கேஜ்" பண்ணவேண்டும் என்று ஒரு விளக்கம் ஐ.நா.விடம் இருப்பதாகத் தெரிந்தது. எனவே, தமிழ் சிவில் சமூகங்களின் வேண்டுகோளை ஏற்றுக்கொள்ளாமல் மனித உரிமைகள் ஆணையாளர் இலங்கைக்கு வருமிடத்து, அவர் செம்மணிப் புதைகுழியைப் பார்வையிட வேண்டும் என்று சிவில் சமூகங்கள் கோரிக்கை விடுத்தன. ஐ.நா. அதை ஏற்றுக்கொண்டது.

சிவில் சமூகங்களுக்கு ஐ.நா. கூறியது ஒரு புதிய விளக்கம் அல்ல. கடந்த 16 ஆண்டுகளில் மேற்கு நாடுகள் தமிழ் சிவில் சமூகங்களுக்கு அடிக்கடி கூறி வந்த ஒரு விளக்கம்தான். குறிப்பாக ராஜபக்சக்களை எதிர்நிலைக்குத் தள்ளினால் அவர்கள் சீனாவை நோக்கிப் போய்விடுவார்கள்; எனவே அவர்களோடு "என்கேஜ்" பண்ணுகிறோம் என்று பெரும்பாலான நாடுகள் கூறின. ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் இலங்கையோடு என்கேஜ் பண்ணவேண்டும் என்று முடிவெடுத்ததற்கு அவர்கள் வெளிப்படையாகக் கூறும் காரணங்களை விட ஆழமான இராஜதந்திர இலக்குகள் உண்டு. இப்போதுள்ள தேசிய மக்கள் சக்தி அரசாங்கமானது ஜே.வி.பி.யை அடித்தளமாகக் கொண்டது. ஜே.வி.பி. சீன சார்பு இடதுசாரி மரபில் வந்தது. தேசிய மக்கள் சக்தியின் முடிவெடுக்கும் அதிகாரமுடைய தலைவர்களில் ஒருவராகிய ரில்வின் சில்வா அண்மையில் சீனாவில் காணப்பட்டார். சீனாவின் செல்வாக்குப் பொறிக்குள் எளிதாக விழக்கூடிய ஒரு அரசாங்கத்தை தங்களால் கையாளப்படத்தக்க ஒரு எல்லைக்குள் வைத்திருக்கவேண்டும் என்று ஐ.நா.வும் சிந்திக்கின்றது; அமெரிக்கா ஐரோப்பா உள்ளிட்ட மேற்கு நாடுகளும் இந்தியாவும் சிந்திக்கின்றன. எனவே இந்த அரசாங்கம் சீனாவை நோக்கிப் போவதை தடுக்கும் நோக்கத்தோடு இந்த அரசாங்கத்தோடு என்கேஜ் பண்ணவேண்டும் என்று மேற்கண்ட தரப்புகள் சிந்திக்கின்றன.

இந்த இராஜதந்திர இலக்கை முன்வைத்துத்தான் மனித உரிமைகள் ஆணையர் இலங்கைக்குள் வந்தார். இப்படிப்பட்டதோர் ராஜதந்திரச் சூழலில், ஐ.நா. தமிழ் மக்களுக்குத் தூய நீதியைப் பெற்றுத்தராது. ஆனால் அதற்காக தமிழ் மக்கள் போராடாமல் இருக்கமுடியாது .

அரசற்ற தரப்பாகிய தமிழ்மக்கள் ஒரு இனமாக ஒரு தேசமாக திரண்டு போராடினால்தான் அந்தத் திரட்சிதான் அவர்களுடைய பேரத்தை கூட்டும். பேரபலம் அதிகரித்தால்தான் நாடுகளும் உலகப் பொது மன்றங்களும் தமிழ் மக்களை நோக்கிவரும். எனவே ஒரு இனமாக திரள்வதற்காக தமது பேரபலத்தை அதிகப்படுத்துவதற்காகத் தமிழ் மக்கள் போராடவேண்டும். ஐ.நா. நிலைமாறு கால நீதியைத் தருமா? அல்லது பரிகார நீதியைத் தருமா? என்பதல்ல இங்கு கேள்வி. ஓர் உலகப் பொது மன்றம் என்ற அடிப்படையில் ஐ.நா.வோடுதான் தமிழ் மக்கள் என்கேஜ் பண்ணவும் வேண்டும். நவீன இராஜதந்திரம் எனப்படுவது என்கேஜ் பண்ணுவதுதான். எனவே தமிழ்மக்கள் உலக சமூகத்துடன் என்கேஜ் பண்ணுவது என்று சொன்னால் முதலில் தங்களை ஒரு தரப்பாக பலப்படுத்திக்கொள்ளவேண்டும். நீதிக்கான போராட்டத்தில் உலகத்தைத் தம்பக்கம் திரட்ட வேண்டுமென்றால் முதலில் தமிழ்மக்கள் தங்களைத் தாங்களே திரட்டிக்கொள்ளவேண்டும். செம்மணியில் நடந்தது போன்ற போராட்டங்கள் தமிழ் மக்களை அவ்வாறு கட்சி கடந்து ஒரு தேசமாகத் திரட்டக்கூடியவை. போராட்ட நெருப்பை அணைய விடாமல் பாதுகாப்பவை.

# ஜானகி



18 ஒளியின் கவிதை

பதின்ம வயதில்
சோற்றுப் பருக்கைகளின்
சுவாசங்களுக்காக ஏங்கினேன்.
மாற்றுத்துணி யாரும் தருவாரோ?
வாழ்வை ஏற்ற வருவாரோ? என
வாசல் முழுவதும் வழி பார்த்தேன்
மனதைக் கேட்டு மானபங்கப்பட்டேன்.
எண்ணங்களை நிர்வாணமாக்கி
வார்த்தைகளால் கற்பழிக்கப்பட்டேன்.

உருக்கம் இல்லாதவர்களாக உறவுகள்.
புறக்கணித்தவர்களின் தயவின்றித் தப்பித்து
ஏழ்மையை விலத்தும் வழிதேடினேன்.
காதல் செய்தவன் காப்பான் என்னும்
எண்ணிய சிந்தனை பொய்யாயிற்று.

ஒருவனை மனதில் கொண்டேன்
உள்ளம் முழுவதும் அவனாகிப்போனான்
அவனோடு வாழ எண்ணம் இசைந்தது.
தோள் கொடுக்கும் தலைவன் என்று
இதயத்தின் இரத்தம் தேனாகி இனித்தது.

இருக்கைகள் இல்லாத இப்பிறவிக்கு
இறக்கைகள் முளைத்ததாக
இறுமாப்பு இணைந்தது.
மனமெல்லாம் மாங்கல்யம் சூடினேன்
காதல் நினைவுகளால் சோற்றுப் பசி
தீர்த்தேன்.....ஆனால்
காரண காரியங்கள் மாறிப்போயின.

ஒரு இறைவியின் உயர்ந்த காதலை
வறுமையென்று உதறியது காலம்.
இல்லாதவர்க்கு வாழ்வு தூரமென்றது
அவன் இரங்கமறுத்தான்.
தொட்டுவிட முடியாத தூரத்தில்
'நீயும் நானும்' என்று கோடுகள் போட்டு
காதலின் துடிப்பைக் கொச்சைப்படுத்தி
கல்லாக நின்றான் அவன்...

முதல் காதலை முழுங்கிக்கொண்டு
விழி பிதுக்க வேற்றுக் கிரகத்தில் நின்றேன்.
இதயத்தில் சூல் கொண்ட காதல் கட்டி
உடைந்து கண்களால் வழிந்தது.

அந்த நிமிடங்கள், என் தேகமெங்கும்
முட்களைக் கொண்டு கீறிக் கிழித்தன.
தாறுமாறாக வருத்திய பண மூடைக்கும்
ஒரு ஏழை எனக்குமிடையில் நெஞ்சைக்கிழித்து.
அருவருப்பை உமிழ்ந்தன.
நான் நின்ற நிலம் என்னை விழுங்கியது
கொடிய வலி என்னைத் தின்றது.

பிணமாக நின்ற எனக்கும்
அம்மணமாக நின்ற அவனுக்கும் இடையில்
காலம் நீண்ட திரையொன்றை ஏற்றியது
இருப்பவை தேடிய அற்ப மனிதன் அப்போது
கற்பின்றித் தெரிந்தான்
காதலை வெளிப்படுத்திக் காயப்பட்ட
இறைவியின் காதல் கத்தி ஓய்ந்தது.

காதல் கருத்தரித்து கற்பிழந்த கன்னியாக
யோக நிலையில் வாழ்வைத் தொடர்ந்தேன்.
வயிற்றின் பசியும் .. வாழ்வின் பசியும்
ஒன்றாகிக் கொல்ல
ஒரு ஏழைத் தாயின் வயிற்றில் பிறந்ததால்
என் எதிர்காலம் அங்கு புறக்கணிக்கப்பட்டது.

தலைமையில்லாக் குடும்பம், நானே
தலைமை ஏற்கவேண்டும்.
வேருமாய் விழுதுமாய்
நான் மட்டுமே தாங்கவேண்டும்.
இரக்கமற்ற காதலுக்காக என்னால்
காலக் குழந்தைகளைத் தண்டிக்க முடியவில்லை.

போரிடப் போக இதயம் மறுத்தது
சுயநலம்கொண்ட ஒருவனுக்காக பத்து
உயிர்களைப் பலிகொடுக்க நான் தயாரில்லை..
சாதனை காணவே என் மனம் துடித்தது
இயலுமை மேவி இதயம் இயங்கியது.

குண்டுகள்..போர், வலி
போக்கிடமில்லாப் பொழுதுகள்
அச்சத்தின் நிழல் முழுவதிலும்
அகப்பட்டுக்கொண்டேன்..
எத்தனை பொழுதுகள் 'தாண்டிக்குளம்'
எல்லையில் தவமிருந்தேன்?
ஒரு வேலை கிடைத்த அனுமதி
புது வாழ்வொன்றைத் தந்தது.

என்னை நம்பிய குடும்பத்தைத் தூக்கிச்செல்ல
இயலவில்லை அது 'அவர்களின்' சட்டம்.
என்னை விடுவதற்கு தம்பி பிணை நின்றான்.
தங்கை போருக்குப் போனாள்...
தாயும் தந்தையும் அழுது விடைகொடுக்க ...
'தாண்டிக்குளம்' வாசலில் தவமிருந்தேன்...
கதவு திறந்தது பிணை கொடுத்து விடைபெற்றேன்.

நெஞ்சில் அவன் மீதான காதல்
மனம் முழுவதும் உறவுகளின் ஞாபகங்கள்
அன்று தொடங்கியது என் பயணம்
தனிப்பெண்ணாகப் புறப்பட்டேன்.
வன்னி மண்ணை விட்டு விடைபெற்றேன்
யாழில் தொடங்கிய நடை...
நாவற்குழி...பளை....கிளிநொச்சி....முல்லைத்தீவு
தாண்டிக்குளம்.........வவுனியா ...கொழும்பு...
கனடா......காலம் மிக வேக வேகமாக
என்னை இடம் நகர்த்தியது.

பணம் வாழ்வின் அடிப்படை என்பதை
காலம் மிக அழகாக எனக்குக் கற்பித்தது...
அதைத் தேடுவதற்கு உழைத்தேன்...
என் இயலுமையை மீறிய ஓட்டம்
பறந்து திரிந்தேன்...என் பிரார்த்தனையும் வலியும்
என் குடும்பத்தை காப்பாற்றி வைத்தது..

அலைந்து திரிந்து பணத்தைச் சேகரித்தேன்
என் உறவுகளைக் கரை சேர்த்தேன்....
ஓயவில்லாத பொழுதுகளும்...
ஓயாத சிந்தனைகளும்...கல்வியின் கையோடு
என் ஆளுமையை பிரமிக்கச் செய்தது...
வேற்று நாட்டவர் வியக்கும்படி
காலம் என் வெற்றியை அமைத்தது.

எதற்கும் என் பெயர் பிரேரிக்கப்பட்டது
பரிசுகள் குவிந்தன...மாலைகள் விழுந்தன.
ஏழைகளுக்கான என் சேவைகள் உலகெங்கினும்
மொழிந்தன....பல்லாயிரம் புகைப்படங்கள்
ஓராயிரம் சுவரொட்டிகள்.....

வலி சுமந்தவள் என வாழ்த்திப் பேசினர்
வதைத்த வலிகள் வளர்த்துவிட்டன..
வலிகள் நெருக்கி மடிந்தவர் பலரில்
போரின் வலி என்னைப் புடம் போட்டது
காதல் வலி என்னை கம்பீரமாக்கியது.

அன்றொரு நாள் என் மண்ணிற்கு நான்
அழைக்கப்பட்டேன்...பிரதம அதிதியாய்
ஏதிலியாய் ஏற்றத்தாழ்வின் பேரில் நிந்திக்கப்பட்ட
என்னை..அதிதியாக அழைத்திருந்தார்கள்.

என் மண்ணின்மீது நான் கொண்ட பற்று
அது பொதுவானது... புலம்
புறக்கணிக்கப்பட்டவள்
விரட்டி அடிக்கப்பட்டவள்...ஓடிப்போனவள்.

அன்று அவனைச் சந்தித்தேன்..
நேசித்த பெண்ணோடு
வாழமுடியாத ஏழைப்பிணமாக அலைந்து
காதலித்த பெண்ணை உதறிவிட்ட
பாவத்தின் வலியைத் தன் பாதை முழுவதும்
அனுபவித்து முடித்த ஒருவனாக......

இன்னொரு பிறவி கிடைத்தால்
ஏற்றத்தாழ்வு பார்க்காத ஏழையாகப் பிறந்து
உன்னைக் காதலிக்க வருகின்றேன் என்று
அவன் கண்கள் சொல்லிமுடித்தன.
இந்தக் கொடிய போர் சில அத்தியாயங்களில்
அவனுக்குப் பல பாடங்களைப் புகட்டியிருக்கிறது
இதை உணர்ந்து கொள்வதற்கு
இவனுக்கு இத்தனை வருடங்களா?

என்னைப் படைத்த இறைவன்
அவனோடு வாழ்வதைவிட
இந்த உலகத்தோடு நான் வாழ 'அவனை'
ஒரு கருவியாக்கி காதல் கொள்ள வைத்தான்.
காதல் வலி என்னைக் கம்பீரமாக்கியது..
அவன் தவறு அவனை ஏதிலியாக்கியது
தவறுகளுக்கான தண்டனைகளையா இப்போர்
எமக்குக் கொடுத்திருக்கிறது?
கேட்கத்தோன்றுகிறது...

காலம் கடந்தும் அவன் நினைவுகளோடுதான்
வாழ்கிறேன்... இந்த உண்மை
அவனுக்கும் எனக்கும்... இந்த இயற்கைக்கும்
மட்டுமே தெரிந்திருக்கலாம்.
இந்தப்போர் எதை விதைத்து விட்டுப்போனாலும்
எதை அழித்து விட்டுப்போனாலும்
என் காதலை அதனால் அழிக்கமுடியவில்லை!
அவன் முன்னே நான் வளர்ந்துகாட்டிவிட்டேன்
ஆனால் வாழ்ந்துகாட்ட முடியவில்லை.
ஏனென்றால்......
என் காதல் பொய்யில்லை...
அது காலம் கடந்தும் வாழ்கின்றது.

ஆனந்தி

## போதை நண்பனை உதறிடு....!

தோள் கொடுக்கும்
தோழனாய் உற்ற
நண்பனாய்
நாமிருக்க
எமை ஒதுக்கி
எமை விடுத்து
போதை எனும்
கொடிய நண்பனுடன்
நட்புக் கொண்டதேனோ
அன்பு நண்பனே
நீ கஷ்டப்பட்டு
சம்பாதித்த உன்
சொத்தைச் சூறையாடி
இறுதியில் உனக்கு
மரணத்தைக் கொடுக்கும்
கொடிய போதை நண்பனின்
கோரப் பசிக்குத்
தீனியாகாது
சீக்கிரமே எம்மோடு
இணைந்துகொள்
தோள் கொடுக்கும்
தோழனாய்
உற்ற நண்பனாய்
என்றும் உம்மோடு
நாமிருப்போம்

( தவிர்க்கமுடியாத காரணங்களால் இந்தவார சஞ்சீவி பக்க எண்ணிக்கையில் குறைவாகவும், வழமையான பல அம்சங்கள் இல்லாமலும் வெளிவந்துள்ளது. அடுத்தவாரம் வழக்கமான அதே பக்கங்களுடனும், பொலிவுடனும், தரத்துடனும் வெளியாகும். – ஆ– ர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செம்மணியில்...

மனிதப்புதைகுழி அமைந்திருக்கும் இடத்தில் மண்மாதிரிகளைப் பரிசோதனை செய்வதற்காக, சட்ட மருத்துவ அதிகாரிகளால் நீதிமன்றத்துக்கு விண்ணப்பம் செய்யப்பட்டிருந்தது. இந்த விண்ணப்பத்துக்கு நீதிமன்றம் முறையான அனுமதிகளை வழங்கியதைத் தொடர்ந்தே, மண் மாதிரிகளை பரிசோதனை செய்வதற்காக கொழும்பிலிருந்து ஒருகுழு வருகைதந்து பரிசோதனை நடவடிக்கையில் ஈடுபடவுள்ளது. இதைவிட யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இரசாயனவியல் பீடபேராசிரியர்களும் கார்பன் பரிசோதனைகளை மேற்கொள்ளவுள்ளனர். அத்துடன், செய்மதிப் படங்கள் மூலமும், ட்ரோன் மூலமும் மேற்கொண்ட ஆய்விலும் தற்போது அகழ்வுப் பணிகள் இடம்பெறும் பகுதிக்கு அருகாகவும் புதைகுழிகள் இருக்கலாம் என்று அகழ்வுப் பணிகளை முன்னெடுத்து வரும் பேராசிரியர் ராஜ் சோமதேவ சந்தேகம் வெளியிட்டிருந்தார். இந்த விடயமும் நீதிமன்றத்துக்கு அறிக்கையிடப்பட்டிருந்தது. இந்த நிலையில், அந்தப் பகுதியில் நீதிமன்ற உத்தரவுக்கு அமைய துப்புரவுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதனால், அகழ்வுப் பணிகள் விரிவாக வாய்ப்புள்ளதாகவும் கருதப்படுகின்றது. (அ-ம-26)

## உலக...

உலக வங்கியின் அதிகாரிகள் இன்று யாழ்ப்பாணம் வருகை தந்து, வடமாகாண ஆளுநர் அலுவலகத்தில் சிறப்புக் கலந்துரையாடலில் ஈடுபடவுள்ளனர் என்று தெரியவருகின்றது.
இந்தக் கலந்துரையாடலில் அமைச்சர்களான பிமல் ரத்நாயக்க, சுனில் ஹந்துன்நெத்தி ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர்.
வடமாகாணத்தின் அபிவிருத்தி, புதிய முதலீடுகள் தொடர்பில் இதன்போது கவனம் செலுத்தப்படும் என்று தெரியவருகின்றது. (அ-ம-26)

## காணாமற்போன...

ளார். அந்தோனிமுத்து ஞானதாஸ் (வயது-37) என்ற இளம் குடும்பத் தலைவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.
வடமராட்சி கிழக்கு மணற்காடுப் பகுதியிலிருந்து கடந்த வியாழக்கிழமை அதிகாலை கட்டுமரத்தில் தொழிலுக்குச் சென்ற அவர் கரைக்குத் திரும்பாத நிலையில், அவர் பயணித்த கட்டுமரம் மட்டும் மீட்கப்பட்டிருந்தது. இதையடுத்தே அந்த மீனவரின் சடலம் நேற்றுக் கரையொதுங்கியுள்ளது. (அ-ம-100-26-113)

## மீனவர்...

எனச் சந்தேகிப்பதாக உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.
சட்டவிரோத கடலட்டைத் தொழிலில் ஈடுபட்டுவரும் படகுகள் மோதி அவர் உயிரிழந்திருக்கலாம் என்று சந்தேகிக்கப்படும் நிலையில், மருதங்கேணி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். தடயவியல் பொலிஸாரும் இந்த விடயம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ-ம-26-100)

## முல்லைத்தீவு...

இந்தியக் கடலோர காவல் படையால் அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
மூன்று இளைஞர்களும் முல்லைத்தீவைச் சேர்ந்தவர்கள் என்றும், அவர்கள் 33, 34 மற்றும் 43 வயதுடையவர்கள் என்றும் பொலிஸார் விசாரணைகளில் உறுதிப்படுத்தியுள்ளனர். சந்தேகநபர்கள் மூவரும், தமிழகத்துக்குள் சட்டவிரோதமாக ஊடுருவி, பின்னர் அங்கிருந்து ஐரோப்பிய நாடுகளுக்குச் செல்வதற்குத் திட்டமிட்டிருந்தனர் என்றும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது. மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (அ-ம-இ)

## காதலிப்பதாக...

அல்லைப்பிட்டிப் பகுதிக்கு அழைத்துச் சென்று, அங்கு தனது நண்பர்களுடன் சேர்ந்து யுவதியைக் கூட்டுப் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தியுள்ளார்.
மருத்துவப் பரிசோதனையில் அந்த யுவதி பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. சந்தேகநபர்களில் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். ஒருவர் தலைமறைவாகியுள்ள நிலையில் அவர் தேடப்பட்டு வருகின்றார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளார். (அ-ம-26)

## சி.ஐ.டி....

ளது. இலங்கையை உலுக்கிய முக்கியமான பல சம்பவங்கள் தொடர்பான விசாரணைகளைத் துரிதப்படுத்தும் நோக்கிலேயே அவருக்கு இந்நியமனம் வழங்கப்பட்டுள்ளது என தெரியவருகின்றது.
ஷானி அபேசேகர இதற்கு முன்னர் குற்றப்புலனாய்வுத்திணைக்களத்தில் உயர்பதவி வகித்திருந்தார். முக்கியமான பல சம்பவங்கள் தொடர்பில் அவர் விசாரணைகளை முன்னெடுத்திருந்தார். இதனால் அரசியல் ரீதியிலான அழுத்தங்கள் மற்றும் பழிவாங்கல்களுக்கு உள்ளாகியிருந்தார்.
உயிர்த்தஞாயிறுத் தாக்குதல், பிணைமுறி மோசடி, கிழக்குப் பல்கலைக்கழக துணைவேந்தர் கடத்தல், வெலிகம துப்பாக்கிச்சூடு, ஊடகவியலாளர் சிவராம் படுகொலை, சமூக செயற்பாட்டாளர்களான லலித், குகன் கடத்தல், 11 மாணவர்கள் கடத்தல், வஸீம் தாஜுதீன் கொலை உள்ளிட்ட பல விசாரணைகள் ஷானி அபேசேகரவின் கண்காணிப்பின்கீழ் இடம்பெற்றன.
இதனால், 2019ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலுக்குப் பிறகு, குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் பணிப்பாளர் பதவியிலிருந்து அவர் மாற்றப்பட்டு, காலி பிரதிப் பொலிஸ்மா அதிபரின் தனிப்பட்ட உதவியாளராக நியமிக்கப்பட்டார். பின்னர், 2020 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 7ஆம் திகதி பொலிஸ் சேவையிலிருந்து இடைநிறுத்தப்பட்டிருந்தார். அவர் மீது ஆதாரங்களைத் திரித்ததாகக் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு, கைது செய்யப்பட்டு விளக்கமறியலிலும் வைக்கப்பட்டார். இருப்பினும், 2023 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 25ஆம் திகதி இந்தக் குற்றச்சாட்டுகளிலிருந்து அவர் விடுவிக்கப்பட்டார். இதையடுத்தே தற்போது அவர் குற்றப் புலனாய்வுத்திணைக்களத்தின் பணிப்பாளராக மீண்டும் நியமிக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-44)

## காரைநகர்...

கொண்ட சுற்றிவளைப்பின்போதே இந்தக் கடத்தல் முறியடிக்கப்பட்டதுடன், சந்தேகநபர்களாக மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களில் இருவர் காரைநகரையும், ஒருவர் அனலைதீவையும் சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
சந்தேகநபர்களிடம் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுவரும் நிலையில், அவர்களை நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (அ-ம-26)

## இராஜேஸ்வரி...

தெரிவித்தார். யாழ்ப்பாணத்தில் நேற்று ஊடகங்களுக்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-
நான் அண்மையில் குறித்த ஆலயத்திற்கு சென்று விடுவிப்பதற்கான நடவடிக்கையை எடுத்திருந்தேன். அது நல்லெண்ண சமிக்ஞையாக யாழ்ப்பாண மாவட்ட இராணுவ கட்டளைத் தளபதியால் எடுக்கப்பட்ட முடிவாகும். இந்த விடயத்தை கொழும்பு இராணுவத் தலைமையகத்துக்கும் அறிவித்து தற்காலிகமாக விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.
ஆனால், ஊடகங்கள் சில விடுபடாத காணிகளை விடுபட்டதாகக் காண்பிப்பதால், சில சிக்கல்கள் வரும் என்பதால் இராஜேஸ்வரி ஆலயத்துக்கு மக்களை அனுமதிக்கும் நடவடிக்கைகளை தற்காலிகமாக இடைநிறுத்தியுள்ளனர். எனினும், எழுத்துமூலம் கொழும்பிலிருந்து அனுமதியைப் பெற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அந்த அனுமதிகிடைத்தும் ஆலயம் உத்தியோகபூர்வமாக விடுவிக்கப்படும் - என்றார். (அ-ம-26)

## இராஜேஸ்வரி ஆலயம்...

மறுத்துள்ளனர். இராஜேஸ்வரி அம்மன் ஆலயத்தில் எந்த நிபந்தனைகள் மற்றும் கட்டுப்பாடுகள் இல்லாமல் வழிபடுவதற்கு நேற்றுமுன்தினம் இராணுவத்தினர் அனுமதித்திருந்தனர். இதைத் தொடர்ந்து, பக்தர்கள் நேற்று ஆலயத்துக்குச் சென்றபோதே, இராணுவத்தினரால் அனுமதி மறுக்கப்பட்டு திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர்.
ஆலயத்துக்குச் செல்வதற்காக இராணுவத்தினரால் அமைக்கப்பட்டிருந்த பிரத்தியேக பாதை நேற்று முட்கம்பிகளால் மூடப்பட்டிருந்ததுடன், இராணுவத்தினரும் அங்கு கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். இது பொதுமக்களிடையே கடும் விசனங்களை ஏற்படுத்தியுள்ளது. (அ-ம-26)

## பற்றியெரிகிறது...

மாகச் செயற்படும் கல்லுண்டாய் வெளி குப்பைமேட்டில் நேற்று இரவு பெரும் தீ ஏற்பட்டுள்ளது.
கல்லுண்டாய்வெளியில் அவ்வப்போது தீ ஏற்படுவது இயல்பானதாகக் காணப்படுகின்ற போதிலும், நேற்று இரவு ஏற்பட்ட தீ இதுவரை பதிவான சம்பவங்களில் மிகப்பெரியது என்று துறைசார் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். தீயணைப்பு வாகனங்கள் சகிதம் தீயைக் கட்டுப்படுத்த கடும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும், பல மணிநேரம்வரை தீயைக் கட்டுக்குள் கொண்டுவரமுடியவில்லை.
கல்லுண்டாய்வெளியில் ஏற்பட்ட தீயைத் தொடர்ந்து, அந்தப் பகுதியில் வசித்துவரும் பல குடும்பங்கள் தங்களின் குழந்தைகள் சகிதம் இரவிரவாக வெளியேறி பாதுகாப்பான இடங்களிலும், தமது உறவினர்கள் வீடுகளிலும் தஞ்சமடைந்தனர். சுவாசப் பிரச்சினைகள் உடையவர்களுக்கு உயிராபத்து ஏற்படும்வகையில் புகையின் தாக்கம் நிலவியது என்றும் சுட்டிக்காட்டப்பட்டது. தீவிபத்துக்குள்ளான பகுதிகளை நாடாளுமன்ற உறுப்பினர் இளங்குமரன் நேரில் பார்வையிட்டார்.
கல்லுண்டாய்வெளி திண்மக் கழிவகற்றல் நிலையம் பாதுகாப்பற்றதாக இருக்கின்றது என்றும், அங்கு அடிக்கடி தீவிபத்து இடம்பெறுவதாலும் வலிகாமம் மேற்கு பிரதேசசபையில் அண்மையில் கண்டனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அத்துடன், சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தால் இந்த விடயம் தொடர்பில் ஆராயவும் நடவடிக்கை எடுக்கவும் குழுவொன்று அமைக்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (அ-ம-125)

## செம்மணிப்...

மீட்கப்பட்ட பகுதியில் தற்போது அகழ்வுப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. நேற்று மேற்கொள்ளப்பட்ட அகழ்வுப் பணிகளின் போதே மேலும் மூன்று சிதிலங்கள் அவதானிக்கப்பட்டுள்ளன. செம்மணிப் புதைகுழியில் இதுவரை 27 மனித என்புத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. அவற்றில் 22 மனித என்புத் தொகுதிகள் முழுமையாக அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பளுதூக்கல் போட்டியில் சென்.ஜோன்ஸ் மாணவர்கள் பதக்கங்களை வென்றனர்!




யாழ்ப்பாணம், ஜூன் 29
வடமாகாணக் கல்வித் திணைக்களத்தால் நடத்தப்பட்ட வடக்கு மாகாணப் பாடசாலைகளுக்கு இடையிலான பளுதூக்கல் போட்டியில் புனித பரியோவான் கல்லூரி மாணவர்கள் பதக்கங்களை தனதாக்கியுள்ளனர்.

17 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவில் ச.வினோஜ் தங்கப்பதக்கத்தையும், 20 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவில் வி.கதிரொளி வெள்ளிப்பதக்கத்தையும் வென்றனர். (ம-26)

**சோளர் அனுமதியுடன் காணி தேவை**

சோளர் பூட்டுவதற்குரிய அனுமதியுடன் (CBE) காணி விற்பனைக்கு இருந்தால் தொடர்புகொள்ளவும்.

**077 082 1010**

cs 58701

**மணமகள் தேவை**

ஆயிலிய நட்சத்திரமுடையதும் 1993ல் பிறந்ததும் முகாமைத்துவ பட்டதாரியும் (BBM-UK). மூன்றிற்கு மேற்பட்ட நிறுவனங்களின் தொழிலதிபராகவும். குறைந்த கிரக பாவமுடையவராகவும் செவ்வாய் தோசம் இல்லாதவருமாகிய வரனிற்கு அழகிய படித்த மணமகளைத் தேடுகின்றனர். தகுதியுடையோர் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு: **071 415 1718**

**வீடு விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் பஸ்தரிப்பு நிலையத்திலிருந்து 2.5 கிலோமீற்றர் தூரத்திலும், பல்கலைக்கழக வளாகத்திலிருந்து 500 மீற்றர் தூரத்திலும் 2 1/4 பரப்புக் காணியில் 4 அறைகள், வரவேற்பறை, சமையலறை, 2 குளியலறை, விறாந்தை தனிக்கிணறு என 2000 சதுர அடியில் அமைந்த பெரிய வீடு பாவனைக்கு ஏற்ற வகையில் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:-
Whats app:-
**+61 421 290 240**

(CS/56843) J-1

**வீடு வாடகைக்கு**

திருநெல்வேலி பலாலி வீதி அம்மாச்சி உணவகத்திற்கு அருகாமையில் உள்ள வீட்டின் முதலாம் மாடியான மூன்று அறைகளுடனான வீடு மாதாந்த வாடகைக்கு உண்டு

தொடர்பு: **077 378 7380**

(CS 58716) E

**IELTS ஆசிரியர்கள் தேவை**

முன் அனுபவமுள்ள IELTS கற்பிக்கும் ஆசிரியர்கள் தேவை.

தொடர்பு :- **077 843 8572**

**வீடு விற்பனைக்கு**

யாழ்ப்பாணம்கொழும்புத்துறையில் சகல வசதிகளுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு:
**077 850 0395**
**076 650 2727**

cs 58702

**விற்பனையாளர்கள் தேவை**

யாழில். இயங்கி வரும் இலத்திரனியல் காட்சியறை ஒன்றிற்கு விற்பனையாளர்கள் தேவை.
வயது எல்லை - 21 - 45
கொடுப்பனவு நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

அழைப்பு எண்:- **076 324 1761**

(CS/57140) J-1

**JOB FAIR** DEWMAS
**வேலைவாய்ப்பு முகாம் 2025**

**150 + Jobs 30 + Companies**



இடம் :- யாழ் இந்துக் கல்லூரி
(குமாரசாமி மண்டபம்)

காலம் :- 05.07.2025 (சனிக்கிழமை)

நேரம் :- காலை 8:30 தொடக்கம்
மாலை 5 மணி வரை

**0740833368 / 0777733368**
**0760984532**

மேலதிக வேலைவாய்ப்பு விபரங்களை அறிந்து கொள்ள
**dewmasweb.com** ஐ பார்வையிடவும்

**பணிப்பெண் தேவை**

தங்கிநின்று வீட்டுவேலை செய்வதற்கு பணிப்பெண் தேவை. இடம்- திருநெல்வேலி

தொடர்புகளுக்கு: **077 308 3007**

**வேலைவாய்ப்பு**

R/EMAX NORTH REALATY
நிர்வாக உதவியாளர்
விற்பனை மேலாளர் உதவியாளர்
விற்பனை முகவர்கள்.

தொடர்பு: **077 566 0000**

**பணியாளர்கள் தேவை**

யாழ் நகரில் அமைந்துள்ள தனியார் வைத்திய சாலைக்கு கீழ்கண்ட பணிகளுக்காக பணியாளர்கள் தேவைப்படுகின்றனர்.

- சுத்திகரிப்பு பணியாளர்கள் (ஆண், பெண்)
- Attendant Staff (ஆண், பெண்)
- உதவிப்பணியாளர்கள் (ஆண், பெண்)

தொடர்பு:- **077 361 8559**

**வீடு வாடகைக்குண்டு**

கொழும்புத்துறை வீதி சுண்டுக்குளியில் (சுண்டுக்குளி பாடசாலை அருகாமையில்) தனியார் நிறுவனம் நடத்தக்கூடிய வீடு வாடகைக்குண்டு

தொடர்பு: **077 394 7972**

(CS 58707) E

**காணி விற்பனைக்கு**

சாவகச்சேரி நுணாவில், கண்டி வீதியிலிருந்து 200m தூரத்தில் 2 பரப்பு, 2 1/2 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.

**077 224 7902**

**யாழ் நகரில் வேலைவாய்ப்பு**

Evergreen Celebration (pvt) LTD
நிறுவனத்தில்

- Event Management
- Decoration Helper
- Decoration Desiginer
- Sales Man

சம்பளம் 45000/=

T.P :- **077 775 0318**

(CS58719) D7

**Van for Hire**

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, கொழும்பு ஆகிய மாவட்டங்களில் Door to Door Pickup செய்யப்படும்.
1 நபர் - 3000

விமானநிலையத்திற்கு சென்று வருவதற்கு 50.000 (kdh Hiroof van)

தொடர்பு: **077 255 0293**

(CS 58720) E

**வேலையாள் தேவை**

யாழ் நகரில் அமைந்துள்ள கணனி விற்பனை நிறுவனத்தில் வேலைக்கு முன் அனுபவம் உள்ள ஆள் தேவை

தொடர்பு: **075 731 6139**

**தென்னந் தோட்டக்காணி விற்பனைக்கு**

பச்சிலைப்பள்ளி பளைப் பிரதேசத்தில் 20 ஏக்கர் வளமான தென்னைக்கு உகந்த காணி விற்பனைக்கு உண்டு. பகுதியாகவும் பெற்றுக் கொள்ளலாம். 1 ஏக்கர் 15 இலட்சம்.

தொடர்பு:-
Whatsapp:- **0044 740 537 3526**

(CS/58593) J-1

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 29.06.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.